இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 154 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 28 – சனிக்கிழமை 13 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 154 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 28 - Saturday 13 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00






முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை துணை அமைச்சர் எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எந்தச் சூழலிலும் மக்களோடு இருப்பவன்; சக்தியை மீறி உழைப்பவன்!

# நாம் எல்லோரும் ஓரினம்!

## "அயலகத் தமிழர் தினம் - 2024" விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜன.13-

**"எந்தச் சூழலிலும் மக்களோடு இருப்பவன் நான்; என் சக்தியை மீறியும் உழைப்பவன் நான்; நீராலும் நிலத்தாலும், ஏன் நாடுகளாலும், கண்டங்களாலும் பிரிந்து இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "அயலகத் தமிழர் தினம் - 2024" விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.01.2024) சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

எனக்கு உடல் நலமில்லை உற்சாகமாக இல்லை என்று நேற்று ஒரு பத்திரிகையில் எழுதி இருந்தார்கள். அதை படித்தபோது எனக்கு சிரிப்புதான் வந்தது. எனக்கு என்ன குறை?

தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றபோது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? நேற்று ஒரு வீடியோ பார்த்தேன். சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி பேசுகிறார். "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. அரிசி, சர்க்கரை, கரும்பு வந்துவிட்டது... வெள்ள நிவாரணமாக ஆறாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. ஒரு மாதத்தில் முதலமைச்சரே எட்டாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டார். பொங்கலுக்கு, யாரையும் நான் எதிர்பார்க்கத் தேவையில்லை என்று பேட்டி கொடுத்திருக்கிறார் அந்தச் சகோதரி. அவர் முகத்தில் பார்க்கின்ற மகிழ்ச்சிதான் எனக்கான உற்சாக மருந்து!

> **"தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்ற போது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? நேற்று ஒரு வீடியோ பார்த்தேன். சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி பேசுகிறார். "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. அரிசி, சர்க்கரை, கரும்பு வந்துவிட்டது... வெள்ள நிவாரணமாக ஆறாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. ஒரு மாதத்தில் முதலமைச்சரே எட்டாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டார். பொங்கலுக்கு, யாரையும் நான் எதிர்பார்க்கத் தேவையில்லை" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் அந்தச் சகோதரி. அவர் முகத்தில் பார்க்கின்ற மகிழ்ச்சிதான் எனக்கான உற்சாக மருந்து!"**

### எந்தச் சூழலிலும் – மக்களோடு இருப்பவன் நான்!

எனக்கு மக்களைப் பற்றிதான் எப்போதும் நினைப்பே தவிர, என்னைப் பற்றி இருந்தது இல்லை. எந்தச் சூழலிலும், மக்களோடு இருப்பவன் நான். என் சக்தியை மீறியும் உழைப்பவன் நான். எனவே இதுமாதிரியான செய்திகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உழைத்துக் கொண்டே இருப்பேன்!

அண்மையில், இதே அரங்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்பது, தமிழ்நாட்டை வளப்படுத்த உலகமே திரண்ட மாநாடு என்று சொன்னால், இன்று நடைபெறுவது உலகத்தை வளப்படுத்தச் சென்ற தமிழர்களைக் கொண்டாடும் மாநாடு!

### உலகமே கவனிக்கும் பதவியில் இருக்கும் தமிழர்!

இந்த மாநாட்டுக்கு கிடைத்த மாபெரும் சிறப்புகளில் ஒன்று, சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்ட அமைச்சர் மாண்புமிகு சண்முகம் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது! அவர், உலகப் புகழ்பெற்ற தமிழன் மட்டுமல்ல, உலகமே கவனிக்கின்ற பதவியில் இருக்கும் தமிழன்!

நான் சிங்கப்பூர் சென்றிருந்த போது நான் தங்கிய இடத்திற்கே வந்து, எனக்கு சிறப்புச் செய்தார். நேற்று அவரை என்னுடைய வீட்டிற்கே வரவழைத்து மகிழ்ந்தேன். அவரை இன்றும், என்றும் வாழ்த்தி வரவேற்கிறேன். அவரைப் போலவே, இந்த மேடையில், உலகமெங்கும் பல நாடுகளில் இருக்கக்கூடிய பல்வேறு பொறுப்புகளில், அறிவால், ஆற்றலால் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக அமர்ந்திருக்கும் அனைவரையும் நான் உள்ளபடியே வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன்.

### சென்ற நாடுகளின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடும் தமிழர்கள்!

அனைவரது வருகைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். மேடையிலும், நேரிலும் அமர்ந்திருக்கும், உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற உழைப்புத் திறன்தான் கடல் கடந்தும் தமிழர்கள் வெற்றிகரமாக வாழக் காரணம்! இப்படி புலம்பெயர்ந்த நம் தமிழ்ச் சொந்தங்கள், அந்த நாடுகளுடைய வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் முதுகெலும்பாக இருந்து வருகிறார்கள்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு வெளிநாடுவாழ் தமிழர்களுடைய துயரங்கள் களைய "வெளிநாடுவாழ் தமிழர் நலப்பிரிவு உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டதோடு, வாரியம் அமைக்கவும் சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## தந்தை பெரியார் விருது-பேராசிரியர் சுப. வீரபாண்டியன், டாக்டர் அம்பேத்கர் விருது – பி.சண்முகம்!

# 2023-ஆம் ஆண்டு - சமூக நீதிக்கான விருதுகள்! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

## விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

சென்னை, ஜன.13–

2023ஆம் ஆண்டிற்கான சமூகநீதிக்கான "தந்தை பெரியார் விருது பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களும், டாக்டர் அம்பேத்கர் விருது பி.சண்முகம் அவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இவ்விருதுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (13.1.2024) வழங்கி சிறப்பிக்கிறார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:–

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும், சமூக நீதிக்காகப் பாடுபடுபவர்களைச் சிறப்பு செய்யும் வகையில், சமூக நீதிக்கான "தந்தை பெரியார் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது. அந்தவகையில், 2023ஆம் ஆண்டிற்கான சமூகநீதிக்கான "தந்தை பெரியார் விருதுக்கு சமூக நீதி கண்காணிப்புக் குழு தலைவர் சுப.வீரபண்டியன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதே போன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் "டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2023ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருதுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பி. சண்முகம் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார். விருது பெறும் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாயுடன், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரையும் வழங்கப்படும்.



(தந்தை பெரியார் விருது) பேராசிரியர் சுப.வீரபாண்டியன் (டாக்டர் அம்பேத்கர் விருது) பி.சண்முகம்

### பேராசிரியர் சுப. வீரபாண்டியன்

சமூகநீதிக்கான "தந்தை பெரியார் விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள சுப. வீரபாண்டியன் அவர்கள், திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர், தந்தை பெரியாரின் பற்றாளர். தமிழ்நாடு அரசு அமைத்துள்ள சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகச் செயலாற்றி வருகிறார். அவர் ஆரியத்தால் வீழ்ந்தோம், திராவிடத்தால் எழுந்தோம், தமிழியத்தால் வெல்வோம் என்னும் முழக்கத்தை முன்வைத்து, 2007–ஆம் ஆண்டு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை என்னும் இயக்கத்தை நிறுவியவர். தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற அவர், கல்லூரியில் பணியாற்றும் பொழுதே தமிழ் தமிழர் இயக்கம் என்னும் அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டவர்.

தந்தை பெரியாரின் கொள்கைகளான சமூக நீதி, சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை மற்றும் பகுத்தறிவு முதலான கருத்துகளை உறுதியுடன் செயல்படுத்த வேண்டும் என்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். சுப. வீரபாண்டியன் அவர்கள் கலைமாமணி விருது பெற்றுள்ளதுடன், இதுவரை 54 நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

### பி.சண்முகம்

"டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள பி. சண்முகம் அவர்கள், தமிழ்நாட்டில் 32 ஆண்டுகாலமாக மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலைவராக பணிவகித்து மலைவாழ் மக்களின் நலனுக்காக பாடுபட்டுள்ளார். மேலும், தருமபுரி மாவட்டம், வாச்சாத்தி கிராமத்தில் மலைவாழ் மக்கள் மற்றும் பெண்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமைகளுக்கு எதிராக பெரும் போராட்டங்களை நடத்தி நீதி பெற்று தந்ததில் பெரும்பங்காற்றியுள்ளார்.

வாச்சாத்தி உண்மையின் போர்க்குரல், வாச்சாத்தி வன்கொடுமை போராட்டம் – வழக்கு தீர்ப்பு, தீக்கதிர் நாளிதழில் வனமக்கள் வாழ்க்கை வளம் பெற, வனங்களை பாதுகாப்பது மக்களே போன்ற செய்தி தொகுப்புகளையும் சண்முகம் அவர்கள் எழுதியுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 13-01-2024



# மகிழ்ச்சியைப் பொங்க வைத்த முதல்வர்

தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் பொங்கல் திருநாளுக்கு முன்னதாகவே ‘மகிழ்ச்சி’யைப் பொங்க வைத்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘அண்ணன் சீர் கிடைத்துவிட்டது’, ‘எங்கள் பெற்றோரைப் போலக் கவனிக்கிறார்’ என்று பொதுமக்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்க பேட்டிகள் அளித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு – அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பை முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே அறிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் 2 கோடியே 19 லட்சத்து, 71 ஆயிரத்து 113 குடும்ப அட்டைகள் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் இந்த பரிசுத் தொகுப்பை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, கரும்பு ஆகியவை கிடைக்கும். இத்துடன் ஆயிரம் ரூபாய் பணமும் தரப்படும் என்று தாயுள்ளத்தோடு அறிவித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்தப் பொருட்களும் பணமும் வழங்கும் திட்டத்தையும் சனவரி 11ஆம் தேதி ஆழ்வார் பேட்டை நியாயவிலைக் கடைக்குச் சென்று, தானே தொடங்கி வைத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் இருந்து வந்து தமிழ்நாட்டில் தங்கி இருக்கும் ஈழத் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் இலவச வேட்டி, சேலையும் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்பட உள்ளது. இதற்காக ஒரு கோடியே 77 லட்சம் வேட்டிகளும், ஒரு கோடியே 77 லட்சம் சேலைகளும் அரசால் வாங்கப்பட்டுள்ளன. இவையும் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளன. ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகள் கிடைக்கப் போகிறது என்பது ஒரு பக்கம். கைத்தறி, விசைத்தறித் தொழிலாளர்கள் இதன் மூலமாகப் பயனடைகிறார்கள் என்பது இன்னொரு பக்கம் ஆகும். இரண்டு தரப்பினரும் பயனடையும் மாபெரும் திட்டமாகும் இது.

பொங்கல் பரிசுத் தொகுப்புக்காக மட்டும் 2,436.19 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மிகுந்த நிதி நெருக்கடி மிகுந்த சூழலிலும் கனிவான உள்ளத்தோடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவு அனைத்துத் தரப்பினராலும் அவருக்கு வாழ்த்துகளை வாங்கித் தந்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர்தான் மிகப்பெரிய இயற்கைப் பேரிடரை தமிழ்நாடு சந்தித்தது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் முதலிலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் அதன்பிறகும் புயல் – மழை – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு – 6 ஆயிரம் ரூபாயை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். ஒன்றிய அரசிடம் நிவாரணத் தொகை கேட்டு தமிழ்நாடு அரசு கோரிக்கைக்கு மேல் கோரிக்கை வைத்து வருகிறதே தவிர, ஒன்றிய அரசிடம் இருந்து ரூபாய் 900 கோடிக்கு மேல் பணம் வரவில்லை.

கடந்த டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்த இரண்டு மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்கும் ஒன்றிய அரசிடமிருந்து நிவாரணத் தொகையாக தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 37,907.19 கோடி ரூபாயைக் கோரியுள்ளது. இது சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 19,692.67 கோடி ரூபாயும், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 18,214.52 கோடி ரூபாயும் உள்ளடக்கியதாகும்.

பிரதமர் அவர்களிடம் டெல்லி சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கை இது. கடந்த டிசம்பர் 19ஆம் தேதி அன்று இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கை வைத்து மூன்று வாரங்கள் ஆகப் போகிறது. ஒன்றிய நிதி அமைச்சர் இங்கு வந்து பார்த்துச் சென்றார். அவரிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒன்றியக் குழு மூன்று நாட்கள் தங்கி ஆய்வை நடத்தியது. அவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்தார். ஒன்றிய உள்துறை அமைச்சரைச் சந்தித்து 13 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் குழுவினர் கோரிக்கை வைக்க இருக்கிறார்கள். ஒன்றிய அரசிடம் இருந்து பணம் வரும் நாளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் – மக்களுக்குப் பணத்தை வாரி வழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

**“வெள்ள நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் அய்யா கொடுத்துட்டாங்க. மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வந்திருச்சு. இப்ப பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய் கிடைச்சிருச்சு. மொத்தம் 8 ஆயிரம் ரூபாயை எங்க அண்ணன் மாதிரி முதலமைச்சர் அய்யா கொடுத்திருக்காங்க. இந்த பொங்கலுக்கு யார் தயவும் எனக்குத் தேவையில்லாம முதலமைச்சர் கொடுத்த பணத்திலயே பொங்கலைக் கொண்டாடிடுவேன்”** என்று ஒரு பெண் அளித்துள்ள பேட்டி என்பது, முதலமைச்சர் அவர்களின் கருணையுள்ளத்தை அளவிடுவதாக அமைந்துள்ளது.

**“உங்கள் வீட்டுக்கு விளக்காவேன்.**
**நாட்டுக்குத் தொண்டனாவேன்.**
**மக்களுக்காகக் கவலைப்படும் தலைவனாக இருப்பேன்.**
**மக்கள் கவலைகளைத் தீர்ப்பதில் முதல்வனாவேன்!”** – என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலுக்கு முன்பு சொன்னார்கள். முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து அதன்படி நடந்து வருகிறார்கள். கோடிக்கணக்கான தமிழ்மக்கள் சார்பில் முதலமைச்சரை வாழ்த்துவோம்! வாழ்க! வாழ்கவே!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில், ‘வேர்களை தேடி’ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பண்பாட்டு சுற்றுலா மேற்கொண்ட ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அயலகத் தமிழ் மாணவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.




முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில், ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, அயலகத் தமிழர்கள் அளித்த நன்கொடைகளை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா. சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை துணை அமைச்சர் எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நேற்று (12.1.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்–மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலக வாழ் தமிழர்களுக்காக

## அயலகத் தமிழர் தின விழாவைக் கொண்டாடிய முதல்வருக்கு நன்றி!

### சென்னையில் சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கே.சண்முகம் பேச்சு!

சென்னை, ஜன. 13 -

உலக வாழ் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் தின விழாவைக் கொண்டாடிய தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி என சென்னையில் நடைபெற்ற விழாவில் பேசிய சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்தார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விழா தமிழ் வெல்லும் என்னும் கருப்பொருளில் அயலகத் தமிழர் தின விழாவில் சிங்கப்பூர் உள்துறை சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம் பேசியதாவது:

சிங்கப்பூரைப் போல் அனைத்து நாடுகளும் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் தின விழாவை கொண்டாட நடவடிக்கை எடுத்த முதலமைச்சருக்கு எனது நன்றி.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் சிங்கப்பூர் தமிழ்நாட்டுக்கு இடையே நல்லுறவு ஏற்பட்டுள்ளது.

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி தமிழ் மொழியின் பெருமை உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது முத்தமிழறிஞர் கலைஞரின் பராசக்தி வசனம் இன்றும் பேசப்படுகிறது. சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம் முத்தமிழறிஞர் கலைஞரைப் போல் யாராலும் பேசவும், எழுதவும் முடியாது.



இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றி வருகிறது. முதலீடுகளை ஈட்டுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டின் ஜி.டி.பி. உற்பத்தி 400 மில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் வெற்றி நடைபோட்டால், அயலகத் தமிழர்கள் பெருமையடைவர்.

சிங்கப்பூரில் தமிழ் பேசும் மக்கள் 5 லட்சம் பேர் வசிக்கின்றனர். சிங்கப்பூர் பள்ளிகளில் தமிழ் மொழி பாடமாக உள்ளது. சிங்கப்பூர் பள்ளி, கல்லூரிகள், நீதிமன்றம், நாடாளுமன்றத்தில் தமிழ் மொழி காணப்படுகிறது சிங்கப்பூரைப் போல் அனைத்து நாடுகளும் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் .

இவ்வாறு சிங்கப்பூர் அமைச்சர் கே.சண்முகம் பேசினார்.

### புதுடெல்லியில் – ஒன்றிய அரசைக் கண்டித்து

## ‘இந்தியா’ கூட்டணி மாணவர் அமைப்பு பேரணி!

### தி.மு.க. சார்பில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

புதுடெல்லி, ஜன.13 -

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக்கொள்கையை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகளின் மாணவர் அமைப்பு சார்பில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடைபெற்றது.

இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி கட்சி, சமாஜ்வாடி கட்சி, இடதுசாரிகள், ராஷ்ட்ரிய ஜனதா தள் ஆகிய கட்சிகளின் மாணவர் அமைப்புகள் தற்போது ஒன்றாக இணைந்து, *United Students of India* என்ற அமைப்பை உருவாக்கி உள்ளன. இந்த அமைப்பின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கையை கண்டித்து டெல்லியில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடைபெற்றது. கல்வியைக் காப்பாற்ற தேசிய கல்விக் கொள்கையை நிராகரியுங்கள்; இந்தியாவைக் காப்பாற்ற, பா.ஜ.க.வை நிராகரியுங்கள் என்ற முழக்கத்துடன் நாடாளுமன்றம் நோக்கி இந்த பேரணி நடைபெற்றது. டெல்லி ஜந்தர் மந்தரில் இருந்து நாடாளுமன்றம் நோக்கி நடைபெற்ற இந்த பேரணியில் காங்கிரஸ், தி.மு.க உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் மாணவர் அமைப்பினர் பங்கேற்று ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கைக்கு எதிராகவும், நீட் தேர்விற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பினர்.

தி.மு.க மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் உள்ளிட்ட பலர் பங்கேற்று முழக்கங்கள் எழுப்பினர்.

# 2024ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது - தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்!

# தமிழ்நாடு அரசு சார்பில் 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ்மொழி பண்பாட்டு வளர்ச்சிக்கு தொண்டாற்றிய அறிஞர்கள் பெயரில் விருதுகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு! முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகளை வழங்குகிறார்!



(திருவள்ளுவர் விருது) தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் | (பேரறிஞர் அண்ணா விருது) பத்தமடை பரமசிவம் | (பெருந்தலைவர் காமராசர் விருது) உ.பலராமன் | (மகாகவி பாரதியார் விருது) கவிஞர் பழநிபாரதி | (பாவேந்தர் பாரதிதாசன் விருது) எழுச்சிக் கவிஞர் முத்தரசு | (தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது) ஜெயசீல ஸ்டீபன் | (முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது) முனைவர் இரா.கருணாநிதி

சென்னை, ஜன.13–

**2024ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது பத்தமடை பரமசிவம் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது உ.பலராமன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் விருது எழுச்சிக் கவிஞர் முத்தரசு அவர்களுக்கும் தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் இரா.கருணாநிதி அவர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு :-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத் தொண்டர்களுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புக்களையும் அளித்து, அவர்தம் தமிழ்த்தொண்டுக்குப் பெருமை சேர்த்து வருகிறது.

**திருவள்ளுவர் விருது - பாலமுருகனடிமை சுவாமிகள்**

அவ்வகையில், பள்ளி மாணவர்களுக்கு 1983ஆம் ஆண்டிலிருந்து திருக்குறள் ஒப்புவித்தல், கட்டுரை, பேச்சு போட்டிகள் நடத்தி வெற்றி பெறும் மாணவச் செல்வங்களுக்கு விழா எடுத்து ரூபாய் 3 லட்சம் பரிசு வழங்கியும் உலகத் திருக்குறள் மாநாடு மாநில அளவில் இரு முறை நடத்தி தமிழ்த் தொண்டாற்றி வரும் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுக்கு 2024ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருதினை வழங்குகிறது.

**பேரறிஞர் அண்ணா விருது - பத்தமடை பரமசிவம்!**

பேரறிஞர் அண்ணா அவர்களின் முதன்மைத் தொண்டர் என பாராட்டப்பட்டவரும் 18 வயது முதல் திராவிட இயக்கத்தில் ஈடுபட்டு பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவருமான திரு, பத்தமடை பரமசிவம் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருதினை வழங்குகிறது.

**பெருந்தலைவர் காமராசர் விருது - உ.பலராமன்!**

தேசியத் தமிழ்க் கவிஞர் பேராயம், சிலப்புச் செல்வர் ம.பொ.சி அவர்களைக் கொண்டு இளங்கோ இலக்கிய மன்றம் ஆகிய அமைப்புகளைத் தொடங்கியவரும் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளரும் மேனாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. உ. பலராமன் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பெருந்தலைவர் காமராசர் விருதினை வழங்குகிறது.

**மகாகவி பாரதியார் விருது - கவிஞர் பழனிபாரதி!**

மேலும், தமிழ்நாடு அரசின் முதன்மையான பல்கலைக்கழகங்கள் கேரள மாநில அரசின் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பாடத்திட்டத்தில் இடம் பெறும் அளவிற்கு கவிதைகளைப் படைத்த கவிஞர் பழனி பாரதி அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான மகாகவி பாரதியார் விருதினை வழங்குகிறது.

**பாவேந்தர் பாரதிதாசன் விருது - எழுச்சிக் கவிஞர் ம.முத்தரசு!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முத்தரசனாரின் "கற்கண்டு கவிதை கேட்டு கழிப்பேறுவகை கொண்டேன்" என்று பாராட்டைப் பெற்றவரும் தமது 92ஆவது அகவையிலும் தனித்தமிழ் வேட்கை அகலாமல் அருந்தமிழ்ப்பணியாற்றி வரும் எழுச்சிக் கவிஞர் ம. முத்தரசு அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்குகிறது.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது - பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன்!**

பல்வேறு நாடுகளின் ஆவணக் காப்பகங்களில் தகவல்களைத் திரட்டி வரலாற்று நூல்களை எழுதியவரும் சோழ மண்டல கடற்கரையை முழுமையாக ஆய்வு செய்தவருமான பேராசிரியர் எஸ். ஜெயசீலஸ்டீபன் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தென்றல் திரு. வி. க. விருதினை வழங்குகிறது.

**முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது - முனைவர் இரா.கருணாநிதி!**

தமிழ் இலக்கணத்தை மாணவர்கள் எளிமையாக கற்கும் வகையில் பாடல்களாக யாத்தளித்த முனைவர் இரா. கருணாநிதி அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினை வழங்குகிறது.

**ரூபாய் 2 இலட்சம் - தங்கப்பதக்கம்!**

விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப் பெறுவார்கள்.

இவ்விருதுகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## "அயலகத் தமிழர் தினம் - 2024" விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஆனால், தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றம் காரணமாக, இந்த முயற்சிகளில் தடை ஏற்பட்டது. ஆனால், இப்போது அமைந்திருக்கின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னபடியே, அயலகத் தமிழர் நலனுக்கென்று தனியாக ஒரு துறையை உருவாக்கி, தனி அமைச்சரையும் நியமித்து, உங்களுடைய அவசரத் தேவைகள் உடனுக்குடன் சிறப்பான முறையில் தீர்த்து வைக்கப்பட்டு வருகிறது.

**சிறப்பாகச் செயல்படும் 'அயலகத் தமிழர் நலவாரியம்'!**

ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்களைக் கொண்ட 'அயலகத் தமிழர் நல வாரியம்' அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையும், வாரியமும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள்.

• வெளிநாடுகளில் நிரந்தரக் குடியுரிமை உள்ள தமிழர்களுடைய குழந்தைகளுக்கு தமிழ் மீது ஆர்வத்தை உருவாக்கி, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக தமிழ் கற்றுத் தரப்படுகிறது.

வெளிநாடுகளில், கைது செய்யப்படுகின்ற சூழலுக்கு ஆளாகின்ற தமிழர்களுக்கு உரிய சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அயல்நாடுகளில் உதவி தேவைப்படுகின்ற தமிழர்களுக்கு ஒன்றிய அரசின் வெளியுறவு அமைச்சகம் மற்றும் தொடர்புடைய இந்தியத் தூதரகத்துடன் இணைந்து உரிய நிவாரண நடவடிக்கைகளை இந்தத் துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

• மருத்துவ இயலாமை மற்றும் பல்வேறு காரணங்களால் தாயகம் திரும்ப முடியாமல் கஷ்டப்படுகின்ற தமிழர்களை தாய்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வரவும், அங்கு இறக்க நேரிடும் தமிழர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும், தமிழ்நாடு அரசால் 1 கோடி ரூபாய் சுழல்நிதி ஏற்படுத்தப்பட்டு, தமிழர்களுடைய துயரங்களைத் துடைக்கின்ற பணி உரிய முறையில் செய்யப்பட்டு வருகிறது.

• முகவர் மீதான புகார், நில அபகரிப்புப் புகார் தொடர்பான 53 இனங்களில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

• பாதுகாப்பான புலம் பெயர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் தொழிற் கல்வி நிலையங்களில், விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

அயல்நாட்டில் வசிக்கின்ற நம்முடைய தமிழர்கள், இங்கு இருக்கின்ற அவர்களுடைய குடும்பத்தினர் எதிர்கொள்ளுகின்ற நிலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைக் களைய, டி.ஜி.பி. அலுவலகத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

• அயல்நாடுகளுக்குச் செல்கின்ற தமிழர்களுக்கு, அந்த நாடுகளின் சட்டம், பண்பாடு மற்றும் மொழி தொடர்பான குறைந்தபட்சப் புரிதலை உருவாக்க, சென்னையில், முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் செயல்பட்டு வந்தது. இப்போது, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும் இந்த மையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

• உக்ரைன், சூடான், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் என்று பல்வேறு நாடுகளில் இருக்கின்ற நம்முடைய தமிழர்கள் அங்கு எதிர்பாராத விதமாக பிரச்சினைகளைச் சந்திக்கின்றபோது, தமிழ்நாடு அரசு விரைவாகச் செயல்பட்டு பத்திரமாக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறது.

• அயல்நாடுகள் மட்டுமில்லாமல், மணிப்பூர் கலவரம், அமர்நாத் பனிச்சரிவு போன்ற இந்தியாவின் பிற மாநிலங்களில் ஏற்படுகின்ற இயற்கை இடர்ப்பாடு மற்றும் அசாதாரண சூழ்நிலைகளிலும் தமிழர்களைப் பாதுகாப்பாக மீட்பதில் கண்ணும் கருத்துமாக நாங்கள் செயல்பட்டதை நீங்களே பார்த்தீர்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த "எனது கிராமம்" திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது.

**அரசு நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழல்!**

வெளிநாடு வாழ் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய சேமிப்பை தமிழ்நாட்டில் பாதுகாப்பாக முதலீடு செய்ய ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இவர்கள் முதலீடுகள் அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழலையும் உருவாக்கி இருக்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் அயலகத் தமிழர் நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக சிறப்பாக தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**தமிழ் அன்னையின் குழந்தைகள்! அந்த உரிமையுடன் உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள்... எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள்! அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டிற்கு வாருங்கள்! கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்! தமிழோடு இணைந்திருங்கள்! நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், நமது திராவிட மாடல் அரசுக்கும் துணையாக இருந்திடுங்கள்!**

கடந்த இரண்டு நாட்களாக, உலகத் தமிழினத்தின் மாநாடு போல சீரும் சிறப்புமாக இது நடந்துகொண்டு வருகிறது. "வேர்களைத் தேடி" என்பது இந்த ஆண்டுக்கான முத்தாய்ப்பான திட்டமாக அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் 200 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து பண்பாட்டுச் சுற்றுலா அழைத்துக்கொண்டு செல்வதற்கு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 58 இளைஞர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து, டிசம்பர் 27ஆம் தேதி முதல் ஜனவரி 10ஆம் தேதி வரை 15 நாட்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கலை, இலக்கியம், பண்பாடு, பழம்பெரும் கட்டடம், வணிகம், விடுதலைப் போராட்டத்தில் நம்முடைய பங்கேற்பு, ஆடைகள் தயாரித்தல், அணிகலன் செய்தல் என்று தமிழர்களின் அனைத்து மாண்புகளையும் பார்த்துக் கொண்டு வந்து, அவர்களுடைய அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொண்டார்கள். இதில் இந்தத் திட்டத்தின் வெற்றியை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

**நாம் எல்லோரும் - ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!**

இந்த ஆண்டின் அயலகத் தமிழர் நாள் கொண்டாட்டம் "தமிழ் வெல்லும்" என்ற சிறப்பான கருப்பொருளைக் கொண்டு, மிக எழுச்சியோடும், 50க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இருந்து வந்திருக்கின்ற உங்கள் எல்லோருடைய பங்கேற்போடும் மிகச் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமில்லாமல், ஒரு தமிழனாகவும் இதைப் பார்த்து நான் அகம் மகிழ்கிறேன். நீராலும், நிலத்தாலும் ஏன் நாடுகளாலும், கண்டங்களாலும் பிரிந்து இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!

**திராவிட மாடல் அரசுக்கு துணையாக இருந்திடுங்கள்!**

தமிழ் அன்னையின் குழந்தைகள்! அந்த உரிமையுடன் உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள்... எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள்! அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டிற்கு வாருங்கள்! கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்! தமிழோடு இணைந்திருங்கள்! நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், நமது திராவிட மாடல் அரசுக்கும் துணையாக இருந்திடுங்கள்! என்று கேட்டு, அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு – 169, சின்னமலை, எல்.டி.ஜி. சாலையில் உள்ள புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.01.2024) தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தென் சென்னை நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மாநகரம் ஆவடி கிழக்கு வடக்கு பகுதி திமுக சார்பில் இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் பகுதி செயலாளர்கள் பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத் தலைமையில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கி மேலும் மாநாட்டில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு சீருடை வழங்கினார். அருகில் ஆவடி மேயர் ஜி.உதயக்குமார், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர்கள். ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் மாவட்ட இளைஞர் துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி மாசெ.ராஜேஷ், டி.பிரியாகுமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் டி.துர்கா பிரசாத், மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள் அப்ரிடி முஸ்தபா, ,சதீஷ், புவனேஷ்குமார் , மகேஷ், உள்பட பலர் உள்ளனர்.

### அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களைவைத் தேர்தலுக்காக

# ஒன்றிய அரசு அரசியல் செய்கிறது - சித்தராமையா குற்றச்சாட்டு!

## 'தினகரன்' தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜன. 13 -

ஒன்றிய பா.ஜ.க. அரசு அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களவைத் தேர்தலுக்காக அரசியல் செய்கிறது; 140 கோடி மக்களையும் ஒன்றிய அரசு அவமதித்துவிட்டது என கர்நாடக முதல்வர் சித்த ராமையா குற்றம் சாட்டியுள்ளதாக 'தினகரன்' நாளேடு 12.01.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டு டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு தங்கள் கட்சி ஆட்சி அல்லாத மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துவது மட்டுமின்றி மறைமுக அரசியல் சதி வேலையில் ஈடுபடுகிறது. கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து சித்தராமையா தலைமையிலான ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு சூழ்ச்சி களில் மாநில பா.ஜ.க. தலைமை ஒன்றிய அரசின் துணையுடன் அரங்கேற்றி வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால் 230 தாலுகாக்கள் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. இதை வறட்சிப் பகுதிகள் என்று அரசு அறிவித்து ஒன்றிய குழு நேரிடையாக பார்வையிட்டுச் சென்ற பிறகும் இதுவரை வறட்சி நிவாரண நிதியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை.



தினகரன்
ஜனவரி 12, 2024 வெள்ளிக்கிழமை

ஒன்றாத அரசு

ஒன்றியத்தில் ஆளும் பாஜ அரசு தங்கள் கட்சி ஆட்சி அல்லாத மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துவது மட்டுமின்றி மறைமுக அரசியல் சதி வேலையில் ஈடுபடுகிறது. கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து சித்தராமையா தலைமையிலான ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு சூழ்ச்சிகளில் மாநில பாஜ தலைமை ஒன்றிய அரசின் துணையுடன் அரங்கேற்றி வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால் 230 தாலுகாக்கள் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. இதை வறட்சி பகுதிகள் என்று அரசு அறிவித்து ஒன்றிய குழு நேரிடையாக பார்வையிட்டு சென்ற பிறகும் இதுவரை வறட்சி நிவாரண நிதியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. பிரதமர் மோடியை முதல்வர் சித்தராமையா நேரில் சந்தித்து வலியுறுத்தியும் எந்த பயனும் இல்லை. உத்தரவாத திட்டங்களை செயல்படுத்த அரசிடம் நிதி இருக்கிறது. வறட்சி

பிரதமர் மோடியை முதல்வர் சித்தராமையா நேரில் சந்தித்து வலியுறுத்தியும் எந்த பயனும் இல்லை. உத்தரவாதத் திட்டங்களை செயல்படுத்த அரசிடம் நிதி இருக்கிறது. வறட்சி பாதித்த பகுதிகளில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி இல்லையா என்று மாநில பா.ஜ.க. கேள்வி எழுப்பி அரசியல் செய்கிறது. ஆனால் 25 பா.ஜ.க. எம்.பி.க்களில் ஒருவர் கூட ஒன்றிய அரசிடம் நிவாரணம் பெற்றுத்தர முன்வராதது ஏன் என்று காங்கிரஸ் கேள்வி எழுப்புகிறது.

இந் நிலையில் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு கர்நாடகாவில் இருந்து யாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. கர்நாடகாவில் ராமர், அனுமன் வழிபாடு பிரசித்தி பெற்றது. அனுமன் பிறந்த இடமாக கர்நாடகாவும் கருதப்படுகிறது. ஒன்றிய அரசு அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களவை தேர்தலுக்காக அரசியல் செய்கிறது என்று குற்றம் சாட்டிய சித்தராமையா, 140 கோடி மக்களையும் ஒன்றிய அரசு அவமதித்துவிட்டது. அயோத்தி கோயில் இந்துக்கள், ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு மட்டுமே சொந்தமானது போன்று பா.ஜ.க. சித்தரிக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு முழுமையாக கட்டி முடிக்கப்படாத கோயிலை பா.ஜ. திறப்பது வெறும் அரசியல் தான். இவ்விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, கார்கே உள்ளிட்டோர் முடிவெடுத்துள்ளதை வரவேற்கிறேன் என குறிப்பிட் டுள்ளார். இதே போன்று துணை முதல்வர் டி.கே. சிவகுமார் ராமர் கோயில் திறப்பு விழாவின் போது கர்நாடக அறநிலையத் துறை சார்பில் அனைத்து கோயில்களிலும் சிறப்பு பூஜை, வழிபாடு நடத்தப் படும் என்று தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பா.ஜ. வினர், ராமர் கோயில் திறப்பு விழாவில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே காங்கிரஸ் இது போன்று அறிவித்துள்ளது என்று குற்றம்சாட்டியுள்ள னர்.

கர்நாடக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் காங்கிரஸ் அரசு கவனம் செலுத்தாமல் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு ஒன்றிய அரசை குறை சொல்வதிலேயே காலம் கடத்தி வருகிறது என்ற பா.ஜ. விமர்சித்து வருகிறது. ஆனால் எத்தனை முறை கேட்டாலும் வறட்சி நிவாரண நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு இழுத்தடிக்கிறது. காங்கிரஸ் ஆளும் மாநிலங்களுடன் ஒன்றாமல் இருக்கும் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. குடியரசு தினவிழாவில் கர்நாடக மாநிலம் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட அணிவகுப்பு ஊர்திக்கு அனுமதி மறுத்துள்ளது. இது குறித்து பா.ஜ. தலைவர்களோ, எம்.பி.க்களோ கேள்வி எழுப்பாமல் காங்கிரஸ் அரசிடம் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக உள்ளனர். இவர்களின் அரசியல் நாடகத்துக்கு மக்களவை தேர்தலில் வாக்காளர்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று முதல்வர் சித்த ராமையா கடுமையாக சாடியுள்ளார்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில்

# அரசின் சேவைகள் மக்களை சென்றடையும் - "மக்களுடன் முதல்வர்" திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து - ஆய்வு!

சென்னை, ஜன. 13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சைதாப்பேட்டை, சின்னமலை, எல்.டி.ஜி. சாலையில் நேற்று நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட சிறப்பு முகாமினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் மக்களைச் சென்றடையும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்திடவும் "மக்களுடன் முதல்வர்" சிறப்புத் திட்ட முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட மண்டலங்களில் நேற்று (12.01.2024) நடைபெற்றது.

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு 169, சின்னமலை, எல்.டி.ஜி. சாலையில் உள்ள புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.1.2024) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், "உங்கள் தொகுதியில் முதல்வர்", "மக்களைத் தேடி மருத்துவம்" போன்ற பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் 05.08.2021 அன்று "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தை முதல் பயனாளிக்கு வழங்கி தொடங்கி வைத்து, ஒரு கோடி பேர் பயனடையும் வகையில் இந்தத் திட்டம் செயல்பட வேண்டும் என்றார். இதனைத் தொடர்ந்து, 50 இலட்சமாவது பயனாளிக்கும், ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே மருந்துப் பெட்டகங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் தற்பொழுது ஒரு கோடியே 70 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, வேலை செய்வதற்காக கம்பெனி மற்றும் தொழிற்சாலைகளுக்கு செல்லும் நபர்களையும் இத்திட்டத்தில் பயனடையச் செய்ய வேண்டும் என்கின்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நிதிநிலை அறிக்கையில் "தொழிற்சாலைகளைத் தேடி மருத்துவம்" என்கிற திட்டம் அறிவிக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 32 இலட்சம் தொழி லாளர்கள் பயன் பெற உள்ளனர். முதற்கட்டமாக 711 கம்பெனிகளில் உள்ள 8 இலட்சத்து 35 ஆயிரம் பேர் பயனடையும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, தமிழ்நாடு முதலமைச்சர் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கோவிட் தொற்று காலத்தில் ஏற்பட்ட இடைநிற்றல் மற்றும் விட்டுப்போன கல்வியை தொடர்வதற்காக 2 இலட்சம் தன்னார்வலர்களைக் கொண்டு "இல்லம் தேடி கல்வி" என்ற திட்டத்தினை தொடங்கி அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக செயல்படுத்தி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் 18.12.2023 அன்று கோயம்புத்தூரில் "மக்களுடன் முதல்வர்" என்கின்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மிக்ஜாம் புயல் தாக்கத்தினைத் தொடர்ந்து, மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் காரணமாக சென்னையில் 5.1.2024 அன்று தொடங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 05.01.2024 அன்று முதல் நேற்று வரை 75 வார்டுகளில் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் 22,556 பேர் மனுக்கள் வழங்கியுள்ளனர். இந்தக் கோரிக்கை மனுக்களின் மீது ஒரு மாதக் கால அவகாசத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தென் சென்னை நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இன்று (12.01.2024) 15 இடங்களில் நடத்தப்பட்ட "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம்களில் பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் 4,971 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

மேலும் "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாமானது நாளையும் (13.01.2024) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் தலா ஒரு வார்டுகளில் நடைபெற உள்ளது.

இன்று (13.01.2024) நடைபெறவுள்ள முகாம்களின் விவரம் - மண்டலம், வார்டு எண், இடம் வருமாறு:

திருவொற்றியூர் - வார்டு எண் 8 - எண்ணூர் ஃபவுண்டரி, திருவொற்றியூர் பிரதான சாலை, சென்னை19.

மணலி - வார்டு எண் 22 - மாநகராட்சி சமூக நலக்கூடம், தேவராஜன் தெரு, சின்னக் சேக்காடு, சென்னை.68

மாதவரம் - வார்டு எண் 30-செல்வ லஷ்மி கல்யாண மண்டபம், பி.ஆர்.எச்.சாலை, மாதவரம், சென்னை60

தண்டையார்பேட்டை - வார்டு எண் 41 - தானியேல் மெட்ரிக் பள்ளி, காரனேஷன் நகர், கொருக்குப் பேட்டை, சென்னை21

இராயபுரம் - வார்டு எண் 54 - குஜராத்தி ஜெயின் கோவில்,

எண்.203/99, மின்ட் தெரு, சென்னை01

திரு.வி.க.நகர் - வார்டு எண் 71 - சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர், சென்னை11

அம்பத்தூர் - வார்டு எண் 89 - சின்ன சுவாமி கல்யாண மண்டபம்,

திருமங்கலம் சாலை, சென்னை110

அண்ணாநகர் - வார்டு எண் 101 - ஜெ.ஜெ.அரங்கம், மைதான தெரு,

கீழ்ப்பாக்கம் கார்டன், சென்னை10

தேனாம்பேட்டை - வார்டு எண் 112 - சென்னை தொடக்கப் பள்ளி, டிரஸ்ட் புரம் மைதானம், புலியூர், 2வது பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை 24

கோடம்பாக்கம் - வார்டு எண் 135 - லஷ்மி மஹால், முதல் அவென்யூ, அசோக் நகர், சென்னை83. வார்டு எண் 141 - சென்னை மேல்நிலைப்பள்ளி, சி.ஐ.டி. நகர், 4வது பிரதான சாலை, சென்னை17.

ஆலந்தூர் - வார்டு எண் 162 - ஆனந்தா கல்யாண மண்டபம், ஆதம்பாக்கம் ஏரி அருகில்

**வழங்கப்படும் சேவைகள்**

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வழங்கப்படும் கட்டுமான வரைபட ஒப்புதல், சொத்துவரி/குடிநீர் வரி பெயர் மாற்றங்கள், வர்த்தக உரிமம், குடிநீர்/கழிவுநீர் இணைப்பு, பிறப்பு/இறப்புச் சான்றிதழ், திடக்கழிவு மேலாண்மை, PMSVANidhi, காலி மனை வரிவிதிப்பு, சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டை, தொடர்பாகவும்,

எரிசக்தித் துறை / தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் புதிய மின் இணைப்பு, மின் கட்டண மாற்றங்கள், மின் இணைப்பு பெயர் மாற்றம், கூடுதல் மின் சுமை கட்டணங்கள் தொடர்பாகவும்,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வழங்கப்படும் பட்டா மாறுதல்/பட்டா உட்பிரிவு/இணைய வழி பட்டா/நில அளவீடு (அத்து காண்பித்தல்), வாரிசுச் சான்றிதழ்/சாதிச் சான்றிதழ்/வருமானச் சான்றிதழ்/இருப்பிடச் சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்கள், முதியோர்/விதவை/கணவனால் கைவிடப்பட்டவர்/மாற்றுத்திறனாளி/முதிர்க் கன்னி/மூன்றாம் பாலினத்தோருக்கான உதவித் தொகைகள் தொடர்பாகவும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை, பராமரிப்பு உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர், சக்கர நாற்காலி, மூன்று சக்கர வண்டி, செயற்கை கால், காது கேட்கும் கருவி மற்றும் இதர உதவி உபகரணங்கள் தொடர்பான கோரிக்கைகள், சுயதொழில் வங்கிக் கடனுதவி, கல்வி உதவித் தொகை, தொழில் பயிற்சி மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை தொடர்பாகவும்,

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் நல வாரியங்களில் உறுப்பினர் பதிவு, பதிவு புதுப்பித்தல் மற்றும் ஓய்வூதியம்/ உதவித் தொகை தொடர்பாகவும்,

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை சார்பில் வழங்கப்படும் கட்டுமான வரைபட ஒப்புதல், நில உபயோக மாற்றத்திற்கான ஒப்புதல், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடு வேண்டிய விண்ணப்பம், வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கான விற்பனை பத்திரம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கான ஆணை/ விற்பனை பத்திரம்

காவல்துறையின் சார்பில் வழங்கப்படும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான புகார்கள், நில அபகரிப்பு மற்றும் மோசடி தொடர்பான புகார்கள், போக்சோ சட்டத்தின் கீழ் புகார்கள் தொடர்பாகவும்,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், புதுமைப் பெண் கல்வி உதவித் திட்டம், ஆதரவற்றோருக்கான உதவித்தொகை தொடர்பாகவும்,

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை மற்றும் வீட்டுமனை/ இணையவழி பட்டாதொடர்பாகவும்,

தாட்கோ கடனுதவிகள், டாம்கோ, டாப்செட்கோ கடனுதவிகள், கூட்டுறவு கடனுதவிகள், மகளிர் சுய உதவிக் குழு கடனுதவிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான கடனுதவி (DIC) தொடர்பான மனுக்களையும் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்களது மனுக்களை முகாம் நடைபெறும் நாட்களில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டு மற்றும் முகவரியில் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ள "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம்களில் சமர்ப்பித்து பயன்பெறுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. முகாமில் கலந்து கொள்பவர்கள் தங்களது கோரிக்கைக்கு ஏற்ப தொடர்பு ஆவணங்களையும் எடுத்துவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி மாத்தூர் 19வது வட்டம் 165 வது பாக முகவர் மறைந்த திருமதி சாந்தா அவர்களின் திருவுருவப்படத்தை, 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் க.காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, வி.கார்த்திகேயன், எஸ்.உதயகுமார் ஆகியோர் முன்னிலையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் திறந்து வைத்து, அம்மையாரது குடும்பத்திற்கு அவரது மகள் சுகாசினி செல்வத்திடம் வட்டக் கழகத்தின் சார்பில் நிதி உதவியை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் ஜி. சரவணன், துளசி, ஹரி சுப்பிரமணி, ஜெயராஜ், துரை தசரதன், நெடுஞ்செழியன், வாட்ச் மதிவாணன், முகமது முஸ்தபா, ஜானகிராமன், வினோத், கஜேந்திரன், சரஸ்வதி, கலைச்செல்வி, அத்திக்குளம் தேவி, தீபிகா, ஜாஸ்மின் மேரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி நகரத்தில் 4வது வார்டு மற்றும் 7வது வார்டில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் பயனாளிகளுக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கம் அரிசி சர்க்கரை முழு கரும்பு வாங்கினார். உடன் திட்டக்குழு உறுப்பினர் ஷாம் சுந்தர், கவுன்சிலர் அசோக் குமார் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சித்திக் அலி உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை
### சனவரி 13 (2005)



கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

"சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு." என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில் -

# அயலகத் தமிழர்களுக்கான விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## 'எனது கிராமம்' எனும் முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் 'தமிழ் வெல்லும்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில் கலந்து கொண்டு தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

**அயலகத் தமிழர் தினம் 2024 விழா**

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை 3வது ஆண்டாக தொடர்ந்து அயலகத் தமிழர் தின விழாவை நடத்தி வருகிறது. இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயல்நாடுகளில் வசிக்கும் 1400க்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்க பதிவு செய்து உள்ளனர். இதில், 218 சர்வதேச தமிழ் சங்கங்கள் மற்றும் 48 பிற மாநில தமிழ் சங்கங்களைச் சேர்ந்த அயலக தமிழர்கள் பங்கேற்றனர்.

**அயலகத் தமிழர் தின விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள்!**

முன்னதாக, முதல் நாளான நேற்று முன்தினம் (11.1.2024) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் தின விழாவைத் தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலக தமிழர் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்தார். இதில், சிறப்பு நேர்வாக கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

முதல் நாள் விழாவில், சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்கள் மற்றும் ஒரு கவிஅரங்கமும், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் தமிழின் தொன்மை - தொடர்ச்சி குறித்து துறைசார் வல்லுநர்கள் கருத்துக்களைப் பகிர்ந்தனர். தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில் சிந்து சமவெளி முதல் செயற்கை நுண்ணறிவு வரை - தொலைநோக்குச் சிந்தனை யும் செயலும் என்ற தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றது.

மேலும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் ஒளிரும் எதிர்காலம் - வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பிலும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தலைமையில் வணிகத்தில் தமிழர்கள் - வாய்ப்பும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

**'எனது கிராமம்' முதலமைச்சர் தொடங்கி வைத்தல்!**

இரண்டாம் நாளான நேற்று (12.1.2024), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாக செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கா. சண்முகம் அவர்கள் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

**'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ் தமிழ் அனுபவங்களைப் பகிர்தல்!**

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, 'வேர்களை தேடி' திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தங்களது பண்பாட்டு சுற்றுலா சென்ற அனுபவங்களை பகிர்ந்தனர்.

**அயலகத் தமிழர்களுக்கான விருதுகள்!**

இவ்விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகள் வழங்கும் விதமாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் சுதாகர் பிச்சைமுத்து அவர்களுக்கும், தமிழ் இலக்கியப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணியன் தின்னப்பன் மற்றும் அமெரிக்க நாட்டின் திருமதி வைதேகி ஹர்பேர்ட், மருத்துவப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த ஜெயராம் லிங்கமாணிக்கர், கல்விப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பால சுவாமிநாதன் மற்றும் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த முருகேசு பரமநாதன், சமூக மேம்பாட்டு பிரிவில் மலேசியா நாட்டைச் சேர்ந்த டத்தோ எம். சரவணன், மகளிர் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திருமதி சித்ரா மகேஷ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி ஜெசிலா பானு, விளையாட்டுப் பிரிவில் தென் கொரியா நாட்டைச் சேர்ந்த ராமன் குருசாமி மற்றும் குவைத் நாட்டைச் சேர்ந்த திருமதி சரண்யா தேவி, வணிகப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பக்கிரிசாமி ராஜமாணிக்கம் மற்றும் மலேசியா நாட்டைச் சேர்ந்த

சையது முகமது சலாவுதீன் ஆகியோருக்கு முதலமைச்சர் அவர்கள் விருதிற்கான தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டு பட்டயம் வழங்கி சிறப்பித்தார்.

**அயலகத் தமிழர் தின விழாவில் இடம் பெற்ற கண்காட்சி அரங்குகள்**

அயலகத் தமிழர் தின விழாவில், தமிழர் நலன், தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகம், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி, சர்வதேச தமிழ் சங்கம் என்ற கருப்பொருள் வாரியாக கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு தமிழர் மரபு மற்றும் பண்பாடுகள் குறித்து விளக்கப்பட்டன.

இதில், தமிழர் நலனை விளக்கும் விதமாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் அரங்குகளும், தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்து தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கழகம் ஆகியவற்றின் சார்பில் அரங்குகளும், இலங்கை தமிழ் கலை கண்காட்சி அரங்குகளும், சர்வதேச தமிழ் சங்கங்களால் அமைக்கப்பட்ட அரங்குகளும், தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை விளக்கும் வகையில் இடம்பெற்றன.

இவற்றுடன் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து செயல்படுத்தும் "நான் முதல்வன் திட்டம்" மற்றும் சிப்காட், வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. சுற்றுலா வளர்ச்சித் துறை மற்றும் பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோஆப்டெக்ஸ், அயலக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. மேலும், வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் குறித்து விளக்கிட ஸ்டார்ட் அப், டிஎன் ஃபேம் ஆகியவற்றின் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா. சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை துணை அமைச்சர் எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி, அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர்கள், வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றி புத்தாடை வழங்குகிறார்!

## குன்றத்தூர் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்! புத்தாடை வழங்கல்!

### படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு! ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

*காஞ்சிபுரம் ஜன:13*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் தமிழர் திருநாள் விழா கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை வழங்கும் விழா

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றி புத்தாடைகள் வழங்குகிறார்.

இது குறித்து குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 13.01.2024 சனிகிழமை 12.00 மணி அளவில் கோவூரில் உள்ள ப்ரித்தி மஹால் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத்தலைவர் து.சுந்தர் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகளை வழங்குகிறார்கள்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் இரா.நரேந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : பொங்கல் விழா, கழக இளைஞரணி மாநாடு, வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு, 2024 நாடாளுமன்ற தேர்தல்,(BLA2). பாகமுகவர்கள் ஆலோசனை. கழக வளர்ச்சி.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. ஏற்பாடு!

## எழும்பூர் தொகுதியில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

*சென்னை, ஜன. 13 -*

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் கால்பந் தாட்டப் போட்டி, கேரம் போட்டி ஆகிய விளையாட்டுப் போட்டிகளும்; பண்பாட்டு நிகழ்வாக கோலப் போட்டி மற்றும் சமத்துவப் பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளன.

எழும்பூர் தொகுதி, 77வது வார்டு, கே.பி.பார்க்கில் அமைந்துள்ள செயற்கை புல் தரை கால்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் 14.01.2024 அன்று காலை 9.00 மணி தொடங்கி எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 16 அணிகள் பங்கேற்கும் கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பர சன், 108 (அ) வட்ட இளை ஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், வழக்கறிஞர் தர்மதுரை ஆகியோர் இக்கால்பந்தாட்டப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.

எழும்பூர் தொகுதி, 108வது வார்டு, சேத்துப்பட்டு, அவ்வைபுரத்தில் 14.01.2024 அன்று காலை 10.00 மணி தொடங்கி நூறுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்கும் கேரம் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கிறது.

எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல் இக்கேரம் போட்டியை ஒருங்கிணைத்து நடத்துகிறார்.

எழும்பூர் தொகுதி, 77வது வார்டு, சூளை, காட்டூர் நல்லமுத்து தெருவில் 14.01.2024 அன்று மதியம் 3.00 மணிக்கு கோலப் போட்டி நடைபெறவிருக்கிறது.

இக்கோலப் போட்டியைப் பாக முகவர் கவிதா ஒருங்கிணைத்து நடத்துகிறார்.

இவ்விளையாட்டுப் போட்டிகளிலும், கோலப் போட்டியிலும் வெற்றி பெறும் அணிகள், போட்டியாளர்களுக்குக் கோப்பைகள், பரிசுப் பொருட்கள் மற்றும் 40,000 ரூபாய் மதிப்பிலான விளையாட்டு வீரர்களுக்கான உடைகள், 50,000 ரூபாய் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி 14.01.2024 அன்று மாலை 7.00 மணியளவில், மாவட்டப் பிரதிநிதி கமலக்கண்ணன் தலைமையில் கே.பி.பார்க்கில் நடைபெறுகிறது. எழும்பூர் தொகுதி, 58வது வட்டம், புரசை வாக்கம், தாக்கர் தெருவில் 15.01.2024 பொங்கல் திருநாளன்று காலை 11.00 மணியளவில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெறவிருக்கிறது. தலைமைக் கழகப் பேச்சாளரும் முன்னாள் வட்டத் துணைச் செயலாளருமான எம்.இ. தேவநிதி இச்சமத்துவப் பொங்கல் விழாவைத் தலைமையேற்று நடத்துகிறார்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க வுள்ளனர். மற்றும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

---

### மதுரவாயல் 151வது வட்டத்தில் எஸ்.மோசஸ் தலைமையில்

## 1,500 குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள்!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

*சென்னை, ஜன.13-*

முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் அறிவுருத்தலின்படி மதுரவாயல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி தலைமையில் 151வது வட்ட செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் மண்டலம் 11-ல் 151வது வட்டத்தில் தமிழர் திருநாள் கொண்டாடும் வகையில் 1,500 குடும்பங்களுக்கு பொங்கல் அரிசி, எண்ணெய், பருப்பு ஆகிய பொருட்கள் அடங்கிய பரிசு வழங்கும் நிகழ்ச்சி இன்று (13.01.24, சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் 151-வது வட்டத்திற்குட்பட்ட ஆஞ்சிநேயர் கோயில் .அருகில் நடைபெற வுள்ளது. ஆகவே இந்நிகழ்ச்சிக்கு மதுரவாயல் தெற்கு பகுதி 151வது வட்டத்திற்குற்பட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.மோசஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, சத்யமூர்த்தி நகர், சிறப்பு காவல்படை குடியிருப்பில், 11000 சதுர மீட்டர் பரப்பில் சுமார் ரூபாய் 50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கலைஞர் நூற்றாண்டு பூங்கா திறப்பு விழா நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் மாநகர மேயர் உதயகுமார், ஆயுதப்படை இயக்குநர் எச்.எம்.ஜெயராம் , மண்டலதலைவர்அமுதாபேபிசேகர்,மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர் பேபி சேகர் காவல் துறை அதிகாரிகள் வார்டு உறுப்பினர்கள் உள்ளனர்.

---

### ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. தலைமை! கே.கண்ணன் - மு.ராசா முன்னிலை!

## விருகம்பாக்கத்தில் 3000 கழகத்தினர் 500 இளைஞர் அணி தோழர்களுக்கு பொங்கல் பரிசு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

*சென்னை, ஜன. 13*

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழகத்தினர் மற்றும் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 500 இளைஞர் அணி தோழர்களுக்கு தமிழர் திருநாளை முன்னிட்டு இன்று (13.1.2024 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில், கோல்டன் பாரடைஸ் திருமண மண்டபத்தில் பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணி யன் கலந்து கொண்டு கழக தோழர்களுக்கு பரிசுகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா, மாமன்ற உறுப்பினர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் பொன். வர.லோகு, ரத்னா லோகேஷ், நிலவரசி துரைராஜ் வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை பழனிச்சாமி, இரா. சொழியன், பி.கே.குமார், அ. கதிரேசன், கி.சதீஷ்கண்ணன், அன்பழகன், சோ. சொந்தில்குமார், எஸ்.மைக்கில், வீ.ஏ.ராஜா, மு.கோவிந்தராஜ், பழக்கடை பாஸ்கரன், தஞ்சை பாபு, மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், கனிமொழி, நிஷா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, சங்கர்கணேஷ், கிருஷ்ணா குமார், எழில் பாண்டியன், ராமபுரம் ரவி, தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொள்கின்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் பண்டிகையை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, நுங்கம்பாக்கம் 110 வது வார்டுக்குட்பட்ட புஷ்பா நகர் குடிசை பகுதி மாற்று வாரிய குடியிருப்பு, ராஜாஜி தெரு, டேங்க் பண்ட் ரோடு, வள்ளுவர் குடியிருப்பு, ஜெயலட்சுமிபுரம், சொக்கடான் சாலை, சீதா நகர், காவலர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3000குடும்பங்களுக்கு புடவை, வேட்டி, சட்டை மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான நாள்காட்டியை, மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு மக்களுக்கு வழங்கி, தமிழர் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைக் கூறினார்.


சென்னை மேற்கு மாவட்டம்
சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி பாக முகவர்கள்
கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட
செயலாளர்களுக்கு
பொங்கல் பரிசு வழங்கும் விழா
நாள் : 13.01.2024 சனிக்கிழமை
இடம் : ஒய்.எம்.சி.ஏ, இராயப்பேட்டை.
ARASU ARTS
பொங்கல் பரிசு வழங்குபவர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்
தயாநிதி மாறன் எம்.பி.
செயலாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி
அன்புடன்
நே.சிற்றரசு M.A.,M.Phil,M.C.,
மாவட்ட செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.


கொரோனா
உடல் காத்தோம்... உயிர் காத்தோம்...
புத்தக (தமிழ்-ஆங்கிலம்)
வெளியீட்டு விழா
வரவேற்புரை
டாக்டர்.பழனியப்பன்
(திருமகள் நிலையம்)
நூல்கள் அறிமுக உரை
திரு.கோ.ஒளிவண்ணன்
(எமரால்டு பதிப்பகம்)
நூல்களை வெளியிடுபவர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
பெற்றுக் கொள்பவர்கள்
திரு.இந்து என்.ராம்
மூத்த பத்திரிகையாளர்
டாக்டர்.மோகன் காமேஸ்வரன்
(MERF நிறுவனர் )
தொகுத்து வழங்குபவர்
கவிஞர் இளைய கம்பன்
அனைவரும் வருக! வருக!! வருக!!!
நாள்: 13.01.2024
சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி
இடம்: 47வது சென்னைப்
புத்தகக் காட்சி,
YMCA நந்தனம்.
கொரோனா
CORONA
CHRONICLES
அனைவரையும் அழைத்து மகிழும்...
மா.சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
நூல் ஆசிரியர்
Santhosh Design
99401 80492



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21 ஆம் தேதி நடைபெறுகின்றது. இதனையடுத்து மாநாடு திடலில் உள்ள அலுவலகத்தில் மாநாடு குறித்து கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மத்திய மாவட்டச் செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ.,மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, எம்.பி.பார்த்திபன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், ஒன்றிய கழக செயலாளர்கள் மூர்த்தி சிவராமன் தங்க மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், வெங்கடேஸ்வரன், பொதுக் குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சோமசுந்தரம், சந்திரமோகன், பேரூராட்சி தலைவர் அன்பழகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் - டி.சுந்தரம்-திருமலை ஜி.துரைசாமி பங்கேற்பு!

# மாதவரம் 30(அ) வட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு மண்டலம் 30(அ) வட்டம் விநாயகபுரம் செல்வ லட்சுமி திருமண மண்டபத்தில் இன்று (13.1.2024) காலை 9.00 மணி அளவில் முதல்வர் அவர்களின் முத்தான மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுமக்கள் பயன்பெற்றிட வேண்டுமாய் வட்டச் செயலாளர் டி.சுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை மாவட்டச் செயலாளர் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் தொடங்கி வைக்கின்றார். இதில் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மாமன்ற உறுப்பினர் திருமலை, ஜி.துரைசாமி, புத்தகரம் இ.ஏழுமலை எம்.சி., குணசுந்தரி மோகன்-சங்கீதா பாபு, கனிமொழி எம்.சி., டி.கார்த்திக் எம்.சி. மற்றும் வட்டக்கழக செயலாளர் எம். சரவணன், குட்டி மோகன், ஸ்ரீராம், சு.அ.சீனி வாசன், லட்சுமிகாந்தன், ஜெ. அரிஷ், ஜி. பார்த்தசாரதி, நிவேதித்தா ராஜேஷ், டி.குருமூர்த்தி, இ. ராமன் கௌதமன், எஸ்.கண்ணன், என்.சுரேஷ் - ஹபிப் ரஹ்மான், பி.எஸ்.என்.எல். கோ.தயாளன், என்.ராஜி, கே.நரேந்திரன், ஏ.வி.முருகன், எம்.சீனிவாசன், சி.பரமேஸ்வரி, டி.உமா மகேஸ்வரி-மாதவி, வெங்கட்ராமன் கருணாநிதி, டி.வி.எஸ்.கோபி, வி. பாஸ்கர், பி.தேவராஜ், பி.எஸ். என்.எல்.குமார், செண்பக ராஜ், பி.வி.ராஜி மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

### திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூரில்

# போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வு அறை!

## கழக மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவொற்றியூர், ஜன.13

சென்னை திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூரில் போக்குவரத்து த் தொழிலாளர்களுக்கு நவீன ஓய்வு அறை மற்றும் கழிப்பறையை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் திறந்துவைத்தார்.

சென்னை திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் மாநகரப் பேருந்து நிலையம் மற்றும் பணிமனையில் தொழிலாளருக்கான ஓய்வு அறை பழுதடைந்து இருந்ததால் புதுப்பித்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதை அடுத்து ரூ.3 லட்சம் செலவில் ஓய்வு அறை புதுப்பிக்கப்பட்டு குளிர்சாதன வசதி நவீன கழிவறை போன்ற அனைத்து வசதிகளுடன் ஓய்வு அறை கட்டப்பட்டு பணிகள் முடிவடைந்ததையொட்டி இதன் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே. பி.சங்கர் கலந்துகொண்டு ஓய்வறையை விளக்கேற்றி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் 2-வது வட்ட மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், முன்னாள் நகர துணை செயலாளர் இ. ரமேஷ், வர்த்தக அணி மாவட்ட துணைத் தலைவர் பிரட் சுரேஷ், பொது மேலாளர் தொழில்நுட்பம் மற்றும் கூட்டாண்மை சுந்தரபாண்டியன், பொது மேலாளர் வடக்கு சுப்பிரமணியன், துணை மேலாளர் பாதுகாப்பு கோபாலகிருஷ்ணன், மண்டல மேலாளர் தண்டபாணி, துணை மேலாளர் கட்டிட பிரிவு திருமதி மணிமேகலை, லோக்சந்தர், தண்டையார்பேட்டை பணிமனை கிளை மேலாளர் கணேசமூர்த்தி, எண்ணூர் பணிமனை கிளை மேலாளர் நாகராஜ், ஏ.இ. கட்டிடப் பிரிவு எண்ணூர் பணிமனை தொ.மு.சா. ஓட்டுநர் செயலாளர் டி.விநாயகம், நடத்துனர் செயலாளர் எம்.எஸ்.ரமேஷ் குமார், தொழில்நுட்ப செயலாளர் எஸ்.கந்தசாமி, ஓட்டுநர் பொதுக்குழு உறுப்பினர் ஆர். அமாவாசை, கணேசன், ஆர். பிரபாகரன், நடத்துனர் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.தங்கதுரை, என்.பாண்டியன், சங்கத்தின் செயல்வீரர்கள் பி.சண்முகசுந்தரம், டி. கார்த்திகேயன், பி.கிருஷ்ணன், டி.சிவா, கே.நிர்மல்குமார், கருணாகரன், ஆர்.காமராஜ், பி.முனுசாமி, ஏழுமலை, எஸ். விஜயகுமார், தஸ்தகீர், திருவொற்றியூர் பணிமனையின் செயல் மறவர்கள் சண்முகம், லோகநாதன், தொ.மு.ச.தேசிங், எம்.தயாநிதி, எஸ்.செல்வம், குமரன், ஜெ.திலகர், ரமேஷ், டீ.தேசப்பன், நேரு நகர் கிராமத் தலைவர் இளங்கோவன்,

முன்னாள் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழ்இன்பன் (எ) நிர்மல் தாஸ் மற்றும் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

### ரெயின்போ விஜயகுமார் ஏற்பாடு! கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி, வி.விஜயலட்சுமி முன்னிலை !

# 48 வது வார்டில் பொங்கல் விழா ! 1000 பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தா.இளையஅருணா, மேயர் பிரியா வழங்குகின்றனர்!

சென்னை ஜன:13

இராயபுரம் 48வது வார்டில் தமிழர் திருநாள் பொங்கல் விழா நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா. இளைய அருணா, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ஆகியோர் 1000 நபர்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்குகின்றனர்.

சென்னை மாநகராட்சி இராயபுரம் 48வது வார்டு சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு நாளை (14.01.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் டி.எச்.ரோடு அன்னை மஹாலில் ரெயின்போ என். விஜயகுமார் ஏற்பாட்டில் நடை பெறுகிறுது.

நிகழ்ச்சிக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி,இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி,48வது வார்டு மாமன்ற உறுப்பினர் வி.விஜயலக்ஷ்மி விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், நேதாஜி யு.கணேசன், கி.ராஜேந்திரன், இரா. பாலன்,எம்.ரவி, எஸ். ரமேஷ்,கு.ரமேஷ், இரா. பொன்முடி, எஸ்.யுவராஜ்,ந. குமார், எம்.பாலாஜி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இதில் ஆர்.டி.சேகர் எம். எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ, ந.மனோகரன், பி.டி. பாண்டிசெல்வம், ஆர்.எம். டி.ரவீந்திரன், இரா.நரேந்திரன், மூ.கோபி, நாகம்மை கருப்பையா, வே.சிவகுமார், ந.சண்முகம், எல்.அருளரசன், டி.கமலகண்ணன், பா.வேளாங்கன்னி எம்.சி,கீதாசுரேஷ் எம். சி, ஏ.டி.மணி, பா.சோமசுந்திர மூர்த்தி, என்.மருதுகணேஷ், வெ.சு.சத்தியநாரயணன்,கா. கோவிந்தசாமி, லயோலா மதன், வி.லட்சுமிவேலு, எ. ரமேஷ்பாபு, லியோ.சுரேஷ், எம். தீனதயாளன், எம்.கே. இஸ்மாயீல், சு. திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், எஸ். புகழேந்தி, கொரியர். பி.முருகன்,பாலா லட்சுமணன், ஜெ.கௌரிஸ்வரன், மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.திருப்பதி, பி. அன்பழகன், இரு.முருகேச பாண்டியன், என்.சிவகுமார், ஜி.தியாகராஜன், வண்ணை வே.விஜயன், எம்.எஸ்.பழனி, எண்ணூர் மணிகண்டன், கே.ஆனந்தபாபு, ஆர்.கார்த்திக், எஸ்.சந்தோஷ், இராயபுரம் கே.மணி, இனோவா,கே. பாலாஜி, சைன்ஷா மற்றும் 48 (அ) வட்ட நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

# இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம்!

## இன்று காணொளி மூலம் நடைபெறுகின்றது!

புதுடெல்லி,ஜன.13

பா.ஜ.க.,வுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் இந்தியா கூட்டணியை அமைத்துள்ளனர். மெகா கூட்டணியான இதில், காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் உட்பட 25க்கும் மேற்பட்ட கட்சிகள் உள்ளன. நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.,வுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கக் கூடிய இக்கூட்டணியின் ஆலோசனை கூட்டங்கள் அவ்வபோது நடைபெற்று வருகின்றனர். ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. காணொளியிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டு பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது. அந்தவகையில், இன்று (சனிக்கிழமை) இந்தியா கூட்டணி கட்சியினரின் ஆலோசனை கூட்டம் காணொளி வாயிலாக நடைபெறும் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், இந்தியா கூட்டணி கட்சிகளுடைய தலைவர்களின் ஆலோசனை கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு Zoom இணையம் வழியாக நடைபெறும் என தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் 151வது வட்ட செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் 151வது வட்டம் ஹோலி கிராஸ் மெட்ரிக் பள்ளி அருகில் நடைபெற்ற விழாவில் 1500 குடும்பத்தினருக்கு பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டது. உடன் வி.விஜயன், செ.இராமையா, ச.சங்கர் கணேஷ் எம்.சி., கே.முரளி, விமலா, கோ.கண்ணதாசன், கே. குமார், மோ.சுந்தர் பரிமளா, ரகு, லோகேந்திரபாபு, இ.பிரசாந்த், தங்கராஜ், சீனு செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.

### மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ்

# சாலையோர சிறு வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை தாங்கி வழங்கினார்!

சென்னை, ஜன.13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.01.2024) சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் சைதாப்பேட்டையில் உள்ள மாந்தோப்பு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சிறுதொழில் நடைபாதை வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலமாக வணிகக் கடன் வழங்கும் நிகழ்ச்சியில் தலைமை தாங்கி வங்கிக் கடன் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**"மக்களுடன் முதல்வர்"**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் மக்களுடன் முதல்வர் என்கின்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் பொதுமக்களின் கோரிக்கையினை பெற்று ஒரு மாத காலத்திற்குள் தீர்வுகாண்பது என்று ஒவ்வொரு தொகுதிகளிலும் ஒன்றியம், பேரூராட்சி, மாநகரப் பகுதிகள், நகரப் பகுதிகளிலும் அம்முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. சென்னையைப் பொறுத்த வரை கடந்த 05.01.2024 அன்று தொடங்கி நேற்று வரை 75 இடங்களில் முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. 75 இடங்களில் நடைபெற்ற முகாம்களில் இதுவரை பெறப்பட்ட புகார் மனுக்களின் எண்ணிக்கை 22,566 ஆகும். இப்புகார் மனுக்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மட்டுமல்லாமல் வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற நலவாரியம், நகராட்சி மேலாண்மைத்துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல்துறை, வருவாய்த் துறை போன்ற தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சேவைத்துறைகளுக்கும் அம்மனுக்கள் பிரித்து அனுப்பப்பட்டு எந்தந்த மனுக்களுக்கு எந்தந்த துறை தீர்வு செய்யப்பட வேண்டும் என்று உறுதி செய்து ஒரு மாத காலத்திற்குள் அம்மனுக்கள் மீது தீர்வு வழங்கப்பட இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் அந்நிகழ்ச்சி நடைபெறும் முகாம்களில் பிறப்புஇறப்பு சான்றிதழ்களுக்கு அங்கேயே தீர்வு காணப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று சென்னையில் 15 இடங்களில் அம்முகாம்கள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகள் இருக்கும் நிலையில் 200 வார்டுகளிலும் இம்முகாம்கள் நடத்திட வேண்டும் என்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்குஏற்ப, அம்முகாம்கள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல் சைதாப்பேட்டை பகுதிகளில் உள்ள சிறு வணிகர்கள், சாலையோரம் பூ வியாபாரம் செய்பவர்கள், காய்கறி விற்பவர்கள், பழம் வியாபாரம் செய்பவர்கள் என்று 1014 நபர்களுக்கு வங்கிகள் மூலம் சிறு வணிகக் கடன் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உள்ளிட்ட 29 வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றிய அரசின் சார்பில் 2020ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட சிறு வணிக கடன் திட்டம் இன்று சைதாப்பேட்டை பகுதியில் உள்ள 1014 சிறு வணிகர்களுக்கு தலா ரூ.10,000/ வீதம் கடன் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த 1014 பேர் இந்த சிறு வணிக கடன் மூலம் அவர்களுடைய சிறு வணிகங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இந்த வங்கிக் கடன் பயனுள்ளதாக இருக்கும் என்கின்ற வகையில் தரப்பட்டிருக்கிறது. வங்கிகளின் சார்பில் வழங்கப்பட்டிருக்கும் தொகையான ரூ.10,000/ 12 மாதங்களுக்கு செலுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் 12 மாதங்களுக்குள் சரியாக செலுத்திவிட்டால் அடுத்து ரூ.20,000/ தொகையினை கடனாக வழங்கப்படும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்த ரூ.20,000/ 24 மாதங்களில் கட்டி முடிப்பார்களேயானால், அவர்களுக்கு ரூ.50,000/ வங்கிக்கடன் வழங்கப்படவிருக்கிறது. சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வணிகக் கடன் திட்டத்தை, சைதாப்பேட்டையில் 1014 நபர்களுக்கு இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

ஊடகங்கள் உண்மைத் தன்மையினை அறிந்து செய்தி வெளியிட வேண்டும்.

நேற்று ஒரு ஊடகத்தில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் தரையை துடைக்கும் குச்சியில் குளுக்கோஸ் பாட்டிலை பொறுத்தி நோயாளிக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டது என்ற செய்தி வெளியிடப்பட்டது. ஆனால் டெங்கு காலத்தில் கொசு வலையினை பொறுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அந்த கட்டிலின் கம்பியில்தான் குளுக்கோஸ் பாட்டில் பொறுத்தப்பட்டு அந்த நோயாளிக்கு ஏற்றப்பட்டது என்பது விசாரணை மேற்கொண்டதில் தெரியவந்துள்ளது. 2 நாட்களுக்கு முன்னர் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் இது போன்ற ஒரு நிகழ்வு ஏற்பட்டதாகவும் செய்தி வெளிடப்பட்டது. இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் வேண்டும் என்றே குளுக்கோஸ் பாட்டிலை பொறுத்தும் கம்பியில் இருந்து எடுத்து அந்த பெண்ணை பிடிக்க வைத்து வீடியோ பதிவு செய்யப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. கீழ்தரமாக வீடியோ பதிவு செய்து சமூக வளைதளத்தில் பதிவு செய்த அந்த நபரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு தேடிக் கொண்டிருக்கிறோம். இப்படி தொடர்ந்து சமூக வலைதளங்களில் தவறான செய்தி பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே செய்தி வெளியிடும் முன்பு அதன் உண்மைத் தன்மையினை அறிந்து செய்தியாக வெளியிட வேண்டும், பொதுவாக அரசு மருத்துவமனையின் அவலம் பாருங்கள் என்ற வகையில் தவறான செய்தி வெளியிட வேண்டாம். முன்பு தென்காசியில் பக்கவாதம் ஏற்பட்ட நபருக்கு தூய்மை பணியார் ஒருவர் மருத்துவம் பார்த்தார் என்ற வகையில் தவறான செய்தி வெளியிடப்பட்டது. விசாரணை மேற்கொண்டதில், அந்த தூய்மை பணியாளர் அந்த நோயாளியை துடைக்கும் பணியினை மேற்கொண்டார் என்பது தெரியவந்தது. எனவே ஊடகங்கள் அவர்களின் ரேட்டிங்கை உயர்த்துவதற்காக அரசு மருத்துவமனையின் மீது தவறான கண்ணோட்டத்தில் செய்தியினை வெளியிட வேண்டாம், செய்தியின் உண்மைத் தன்மையினை அறிந்து வெளியிட வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.ப்ரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருதி.ஆர். லலிதா, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ. பிரவீன்குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் துணை பொது மேலாளர் தேவேந்திர குமார், உதவி பொது மேலாளர் பங்கஜ் குமார் சிங், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்று பணிபுரிந்துள்ள

# 113 ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் - சான்றிதழ்!

## மேயர் பிரியா வழங்கினார்!

சென்னை, ஜன.13-

பெருநகர சென்னை மாநகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்று பணிபுரிந்துள்ள 113 ஓட்டுநர்களுக்கு மேயர் திருமதி ஆர்.பிரியா தங்கப்பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்று பணிபுரிந்துள்ள 113 ஓட்டுநர்களுக்கு மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தங்கப் பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை நேற்று (12.01.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்று பணிபுரிந்துள்ள ஓட்டுநர்களுக்கு இயந்திரப் பொறியியல் துறையின் சார்பில் அவர்களைக் கௌரவிக்கும் விதமாக சிறப்பு பரிசாக 4 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில், பணிக்காலத்தின்போது வாகனத்தை விபத்தின்றி இயக்கியிருத்தல் (Accident free service), வாகனங்களைப் பராமரிக்கும் தன்மை (Maintenance of Vehicle), எரிபொருள் சேமிப்பு (Fuel Consumption), நன்னடத்தை மற்றும் தொடர் பணி வருகை (Attendance and General Behavior) ஆகியவற்றின் அடிப்படையில் 20 ஆண்டுகள் மாசற்று பணிபுரிந்துள்ள 113 ஓட்டுநர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் என ரூ.34.35 இலட்சம் மதிப்பீட்டில் தங்கப்பதக்கங்கள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர்மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக் குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு) மற்றும் தலைமைப் பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு! மதுரவாயல் வடக்குப் பகுதி

# 147 வது வட்ட தி.மு.க. சார்பில் பொங்கல் விழா!

## வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜன. 13

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டம், கங்கா நகர் 3 வது தெரு, புதிய பூங்காவில் தை திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா இன்று (13.1.024 சனிக்கிழமை) காலை 8 மணிக்கு, 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் நடைபெறுகிறது.

147 வார்டு மாமன்ற உறுப்பினர் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொள்கிறார்.

ஆகவே வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மேனாள் கவுன்சிலர்,147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக் குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கே.பி.சங்கர் தலைமை ! எம்.கார்த்திக் ஏற்பாடு !

# திருவொற்றியூரில் பொங்கல் விழா! அறுசுவை உணவு !

சென்னை ஜன:13

திருவொற்றியூர் இளைஞர் அணி சார்பில் தமிழர் திருநாள் பொங்கலை முன்னிட்டு நாளை (14.01.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் கருணாலயம் குழந்தைகள் காப்பகத்தில் சர்க்கரை பொங்கல் உள்ளிட்ட அறுசுவை அசைவ உணவுகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி. சங்கர் தலைமையில் எம். கார்த்திக் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக முன்னணி நிர்வாகிகள் வி.இராமநாதன், இரா. முருகேசன், எஸ்.முத்தையா, ஏகா.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், எம்.அப்துல்சலீம், குட்டி (எ) எத்திராஜ், சந்தான கிருஷ்ணன், எஸ்.எ.மணி, பா.பாலஉமாபதி, டீ.இ.பரணிகுமார், ஜே.கருணாநிதி, கே.எஸ். ஆனந்தன், எஸ்.முத்துராஜ், பி.ராமராஜன், டி. கதிரவன், ஜே.சுந்தரம், நா.அணில்குமார், ராதா தங்கவேல், எம்.எல். வேலன், என்.உத்தமன், எம்.சீனிவாசன், ஒய்.ஆர். வி.ரவி, எம்.மனோஜ், மைக்கேல், டைலர் பாபு,சபா, இரா.கணேசன், சபரிநாதன், எம்.புருஷோத்தமன், விஜயராஜ், கிஷோர் மோகன், சி.தினேஷ், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் இளைஞர் அணி தம்பிகளும் கலந்து கொள்கின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, பொங்கல் சிறப்பு தொகுப்பு மற்றும் ரூபாய் 1000 ஆகியவற்றை, மாதவரம் வடக்கு பகுதி, 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள நியாய விலை கடையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் வட்டச் செயலாளர் கே.கருணாகரன், எஸ். பாலாஜி,சி.மூர்த்தி, வி.பார்த்தசாரதி உள்ளனர்.

## கடும் மழையைப் பொருட்படுத்தாமல் பணியாற்றினீர்கள்!

# சென்னையின் அன்னை நீங்கள் தான்!

### சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் 1,700 முன்களப் பணியாளர்களுக்கு பரிசு வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜன.13-**

**கடும் மழையைப் பொருட்படுத்தாமல் பணியாற்றிய முன்களப் பணியாளர்கள்தான் சென்னையின் அன்னை என்றும் இன்று சென்னை சென்னையாக இருப்பதற்கு காரணம் நீங்கள்தான் என்றும் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் 1,700 முன்களப் பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார்.**

**சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த முன் களப்பணியாளர்கள் 1,700 பேருக்கு தமிழர் திருநாளான பொங்கல் தினத்தையொட்டி சென்னை மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் புத்தாடை, பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பரிசுப்பொருட்களை வழங்கி உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் பெருமை அடைகின்றேன். முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு, கடந்தாண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி உங்களையெல்லாம் சந்தித்தேன். உங்களுடன் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டேன்.

#### தாய் வீட்டிற்குத் திரும்புகின்ற உணர்வு!

இன்றைக்குத் தமிழர் திருநாளை முன்னிட்டு, உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். நான் எப்பொழுதுமே சொல்வதுதான். தமிழ்நாடு முழுக்க எல்லா மாவட்டத்திற்கும் பயணம் செய்தாலும், இந்த சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி வரும்போது மட்டும் தாய் வீட்டிற்குத் திரும்புகின்ற அந்த உணர்வுதான் ஏற்படுகிறது.

இப்பொழுது உங்களையெல்லாம் பார்க்கும்போது தன் சொந்த வீட்டில் தன் குடும்பத்தாரைப் பார்ப்பது போன்று உணர்வு தோன்றுகிறது. கடந்த மூன்று நாட்களாகச் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி முழுவதும் பொங்கலை திருநாளை முன்னிட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகளைத் தெருத் தெருவாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்துக்கும் அளித்து வருகின்றோம்.

கழக அரசு சார்பிலும் கழகம் சார்பாகவும் நேற்று மட்டும் 12 இடங்களில் கிட்டத்தட்ட 20,000 குடும்பங்களுக்கு, பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கி இருக்கின்றோம். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இன்றைக்கு 15 ஆயிரம் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றோம். தொடர்ந்து இதே மாதிரியான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டும் வருகின்றோம்.

#### `மிக்ஜாம்'புயல் பணிகள்!

இந்த நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் தயாநிதிமாறன், மாவட்டச் செயலாளர் சகோதரர் சிற்றரசு குறிப்பிட்டதுபோல் சமீபத்தில் `மிக்ஜாம்' புயலின்போது நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு எங்கள் அனைவரது பாராட்டையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

டிசம்பர் 4 மற்றும் 5ஆம் தேதி மிகப்பெரிய மழை வரப்போகிறது என்று சொன்னார்கள். மூன்றாம் தேதி நான் சேலத்தில் இருந்தேன். டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் இளைஞர் அணி மாநாடு நடப்பதாக இருந்தது. அதன் ஏற்பாடுகளைப் பார்ப்பதற்காக நான் சேலத்தில் இருந்தேன். 3 ஆம் தேதி இரவு மழை ஆரம்பித்து விட்டது.

#### நேராக தொகுதிக்குத்தான் வந்தேன்!

நான் அங்கே எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டு, அங்கிருந்து கோயம்புத்தூர் சென்று, கோயம்புத்தூரிலிருந்து விமான நிலையத்திற்கு வந்தேன். அப்போதும் நிறைய பேர், ``விமானத்தில் போகாதீர்கள். சென்னையில் இறங்கவே முடியாது" என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு காற்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது.

#### விமானம் இறங்க முடியாத அளவிற்கு கனமழை!

இருந்தாலும், `பரவாயில்லை நான் சென்னைக்குப் போக வேண்டும்' என்று சொல்லி நானும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் இயக்கத்தினரும் இரவு 8 மணி ஃப்ளைட்ஐ பிடித்து கிளம்பிவிட்டோம். இங்கே ஒன்பது மணிக்கு இறங்க வேண்டிய ஃப்ளைட் இறங்க முடியாத அளவுக்கு காற்றுடன் கூடிய கன மழை. ஃப்ளைட் ஒரே நிலையில் பறக்காமல் காற்றில் தடுமாறுவதை உணர்ந்து உள்ளே இருப்பவர்கள் சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

அந்த அளவுக்கு ஃப்ளைட் ஆட ஆரம்பித்து விட்டது. கிட்டதட்ட பத்தரை மணிக்கு ஃப்ளைட் தரையிறங்கியது. இறங்கிய உடனே நேராக வீட்டுக்குக் கூடப் போகவில்லை. அங்கிருந்து நம்முடைய தொகுதிக்குத்தான் வந்தேன். இரவு 11 மணிக்கு தொடங்கி தொகுதி முழுவதும் சுற்றிவிட்டு அதன் பிறகுதான் வீட்டுக்குச் சென்றேன்.

நள்ளிரவு 2.00 மணி, அப்போது மழை வழக்கத்தைவிட அதிகமாக பெய்யத்தொடங்கியது. மீண்டும் தொகுதிக்கு வந்து நடேசன் சாலைப் பகுதிக்கு வந்தோம். அதற்கு மேல் வண்டி போக முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் இறங்கி நடந்துபோகும் போது எங்களுக்கு முன்னால் அங்கு தேங்கியிருந்த நீரை அகற்றும் பணிகளைச் செய்து கொண்டிருந்தது, களப்பணியாளர்களாகிய நீங்கள் தான். பார்த்து வியந்துபோய் விட்டேன்.

'இப்படி மழை பெய்து கொண்டிருக்கிறது. நம்மாலேயே வர முடியவில்லை. இவர்கள் எப்படி இவ்வளவு தைரியமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று வியந்துபோய் அவர்களுக்குத் தேவையானதையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு வந்தோம்.

#### 2015ஆம் ஆண்டு பெருவெள்ளம்!

கடந்த 2015ஆம் ஆண்டு இதேபோல ஒரு பெரு வெள்ளம் வந்தது உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். அப்போது சென்னை மாநகரம் கிட்டத்தட்ட பத்து நாட்கள் மூழ்கியிருந்தது. சகஜ நிலை திரும்புவதற்கு 10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால், இந்தப் புயல், மழைவெள்ளத்தில் மூன்றே நாட்களில் சகஜ நிலைக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு முழு காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய முன் களப் பணியாளர்களாகிய நீங்கள்தான்.

வெள்ள நீரை வெளியேற்றியது, உடனடியாக மின் சேவையை வழங்கியது, புயலால் விழுந்த மரங்களை அப்புறப்படுத்தியது, வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட குப்பைகளை உடனடியாக சுத்தம் செய்தது என்று நீங்கள் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் தமிழ்நாட்டின் வரலாற்றில் பதிந்திருக்கிறது.



சிறப்பான நிகழ்ச்சி ஏற்பாடு!

உங்களுடைய அந்தப் பணிகளுக்காக நாங்கள் அத்தனை பேரும் உங்களுக்கு தலைவணங்குகிறோம். அந்த வெள்ள நேரத்திலும் நானாக இருக்கட்டும், அண்ணன் தயாநிதி மாறன் அவர்களாக இருக்கட்டும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கட்டும், மாவட்டச் செயலாளராக இருக்கட்டும் தெருவில் இறங்கி மக்களை சந்தித்து மக்களின் குறைகளை கேட்டுக் கொண்டிருந்தோம்.

எந்த தைரியத்தில் போனோம்? நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் அந்தப் பணிகளை செய்து கொடுப்பீர்கள் என்ற அந்த தைரியத்தில்தான். ஆகவே உங்களுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது போதாது.

> **நீங்கள் ஒருநாள், ஒரு மணி நேரம் வேலை செய்யாமல் போனீர்களென்றால் ஒட்டுமொத்த சென்னையும் முடங்கிவிடும். தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள் தினந்தோறும் இந்த மாநகரத்தை எப்படி தூய்மைப்படுத்தி வருகின்றீர்களோ, அதேபோலத்தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், சமூகத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக மண்டிக் கிடந்த மூடநம்பிக்கை, ஜாதி, மதம், சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற குப்பைகளைச் சுத்தப்படுத்தி நம்முடைய வாழ்க்கையை உயர்த்தியுள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டையே தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும் தூய்மைப்படுத்தியவர் தான் நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள்.**

#### பாராட்டுகள் வாழ்த்துகள்!

இது இன்றைக்கு மதியம் நடந்திருக்கவேண்டிய நிகழ்ச்சி. எனக்குத் தொடர்ந்து பல்வேறு அலுவல்கள் இருந்ததால் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சிற்றரசு அவர்கள் இன்று மாலை நடத்தி இருக்கிறார். நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்தியதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு சென்னை, சென்னையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இங்கே கூடி இருக்கக்கூடிய நீங்கள்தான். உங்களையெல்லாம் `சென்னையின் அன்னை' என்றுகூட சொல்லலாம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வீட்டில் ஒரு குழந்தை காலையில் எழுந்து விளையாட போய்விட்டு, திரும்பி மாலை வரும்போது வியர்வை, அழுக்கு, மண் எல்லாம் ஒட்டிக்கொண்டுதான் வரும். முதலில் தாய்க்கு கொஞ்சம் கோபம் வரும். ஆனால், திட்டாமல் அந்தத் தாய் அந்தக் குழந்தையை அரவணைத்து, அதை குளிக்கச் செய்து தலை துவட்டி சுத்தம் செய்வார்கள். நான் குழந்தை என்று சொன்னது, நம்முடைய சென்னையை. தாய் என்று சொன்னது உங்களை.

சென்னை எவ்வளவு அழுக்காக, வியர்வையோடு வந்தாலும், அதை தினமும் சுத்தப்படுத்தி குளிப்பாட்டுவது இங்கு வந்திருக்கக்கூடிய பெற்றோர்களாகிய நீங்கள்தான்.

முக்கியமாக, நான் தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் என்கிட்ட அங்கு இருக்கக்கூடிய நிறைய பேர் சொல்வார்கள். `என்னங்க, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிதான் ரொம்ப சுத்தமாக இருக்கிறதாம். எல்லா வேலைகளையும் உடனே செய்து கொடுத்து விடுகிறீர்களாம், மக்கள் என்ன கோரிக்கை வைத்தாலும் நடக்கிறதாம். நாங்களும் உங்கள் தொகுதிக்கு மாறி வந்துவிடலாம் என்று இருக்கிறோம்' என்று சொல்வார்கள்.

நகரம் நிம்மதியாக மூச்சு விட நீங்களே காரணம்!

அதற்கு என்னுடைய பணிகள் மட்டும் காரணம் கிடையாது. இங்கே வந்திருக்கக்கூடிய உங்களுடைய பணிகள்தான் மிகமிக முக்கிய காரணம். இங்கே சுமார் 1,700 தூய்மைப் பணியாளர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் பெயரளவில் மட்டும் தூய்மைப் பணியாளர்கள் கிடையாது. மனதளவிலும் நீங்கள் மிக மிக தூய்மையானவர்கள் என்பது எனக்குத் தெரியும்.

இந்த நகரம் நிம்மதியாக மூச்சு விடுகிறது என்றால், சுத்தமான காற்றை சுவாசிக்கிறது என்றால், நல்ல தண்ணீரைக் குடிக்கிறோம் என்றால், மின் தடை இல்லாமல் இருக்கிறது என்றால் அதற்கெல்லாம் காரணம் யார் என்றால், இங்கே அமர்ந்திருக்கக்கூடிய முன்களப் பணியாளர்களாகிய நீங்கள் தான்.

ஓய்வு இல்லாமல் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பகல் இரவு பார்க்காமல், வெயில், மழை என்று பார்க்காமல், பேரிடரோ, பெருந்தொற்றோ என்று முகம் சுளிக்காமல் களத்தில் இறங்கி பணியாற்றுபவர்கள்தான் நீங்கள். எல்லோருக்கும் முன் பணியைத் தொடங்கி, எல்லோருக்கும் பின் பணியை முடிப்பவர்கள் என்ற பெருமையைக் கொண்டவர்கள் நீங்கள்.

உங்கள் உழைப்பின் அருமையைப் புரிந்த இயக்கம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான் உங்களையெல்லாம் அடிக்கடி சந்தித்து உங்களுடைய சேவைகளை நாங்கள் பாராட்டி கௌரவித்து வருகின்றோம்.

நீங்கள் ஒருநாள், ஒரு மணி நேரம் வேலை செய்யாமல் போனீர்களென்றால் ஒட்டுமொத்த சென்னையும் முடங்கிவிடும். தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள் தினந்தோறும் இந்த மாநகரத்தை எப்படி தூய்மைப்படுத்தி வருகின்றீர்களோ, அதேபோலத்தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், சமூகத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக மண்டிக் கிடந்த மூடநம்பிக்கை, ஜாதி, மதம், சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற குப்பைகளைச் சுத்தப்படுத்தி நம்முடைய வாழ்க்கையை உயர்த்தியுள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டையே தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும் தூய்மைப்படுத்தியவர் தான் நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள்.

#### உங்களுக்காக ஏராளமான திட்டங்கள்!

தன் வாழ்க்கை முழுக்க அடித்தட்டு மக்களின் பசியைப் போக்கவேண்டும் என்றும் அவர்கள் வாழ்வில் மேலே வர வேண்டும் என்றும் உழைத்தவர் தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர். இன்றைக்கு நேற்று என்று இல்லை, என்றைக்கும் இந்த இயக்கம் உங்களுக்குப் பக்க பலமாக உங்கள் தோளோடு தோளாக நிற்கும். நம்முடைய கலைஞர் காலம் முதல் இப்பொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் இந்த திராவிட மாடல் ஆட்சியிலும் உங்களுக்கான ஏராளமான திட்டங்களை நம்முடைய கழக அரசு கொடுத்துள்ளது.

துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் மூலம் சுமார் 4 ஆயிரம் பேருக்கு நிதி உதவி மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள நம்முடைய திராவிட மாடல் அரசு அதற்கான வாய்ப்பை உங்களுக்குக் கொடுத்திருக்கிறது.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை மாற்றப்பட்டு, அதற்காக தனி சட்டத்தை இயற்றியது நம்முடைய கழக அரசு. அந்த சட்டத்தின்படி தூய்மைப் பணியாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு, சுயதொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கழக அரசு அமைந்தவுடன் கொரோனா இரண்டாவது அலை வேகம் எடுத்தது. அப்போது நீங்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அதனால்தான் உங்களை முன்களப் பணியாளர்கள் என்று நம்முடைய திராவிட மாடல் அரசு அறிவித்தது.

மேலும் ஊதிய உயர்வு, வீடுகள் கட்டிக் கொடுப்பது என உங்களுக்குத் தேவையானவற்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்து கொடுத்திருக்கிறார். தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்கள் 500 பேருக்கு 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது.

ஊரகப்பகுதியில் இருக்கக்கூடிய தூய்மைக் காவலர்களின் மாதாந்திர மதிப்பு ஊதியத்தை 3 ஆயிரத்து 600 ரூபாயிலிருந்து 5 ஆயிரமாக உயர்த்தி வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும் ஏற்றமிகு 7 திட்டங்களின் கீழ், சென்னை மாநகரப் பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீனப்படுத்தி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்க நம்முடைய கழக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக இந்திய ஒன்றியத்திலேயே இப்படி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அரசு எதுவென்றால், அது நம்முடைய கழக அரசுதான்.

இந்த அரசு, எல்லோருக்குமான அரசாக எல்லாருடைய நிறைகுறைகளை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதெல்லாம் உங்களுக்குத் தேவை இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் உங்களுக்குத் துணை நிற்பார்கள்.

நீங்களும் இந்த அரசுக்கு ஆதரவாக முதலமைச்சர் அவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு வந்திருந்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்."

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சிற்றரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பகுதிக் கழக செயலாளர்கள் மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர் கான், அணிகளின் மாநில நிர்வாகிகள் வி.பி.பொன்னரசு, கௌதம், கென்னடி, இறையன்பன் குத்தூஸ், ஆர்.என்.துரை உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஈஸ்வரி வெங்கடேசன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், ஜி.வெங்கடேசன் உள்ளிட்ட வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

எஸ்.முரளி தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

## மயிலை கிழக்கு பகுதியில் கழக நிர்வாகிகளுக்கு தமிழர் திருநாள் - பொங்கல் பரிசு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்!

*சென்னை, ஜன 13-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா இன்று (13.01.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் இடம்: மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகம் சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை28 நடைபெறுகிறது.*

*தலைமை: மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, முன்னிலை: மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., கிழக்கு பகுதி அவைத்தலைவர் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், ஏ.தாஸ், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, விமலாகிருஷ்ண மூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி.*

*வரவேற்பு: 171வது வட்ட செயலாளர்கள் துரைபார்த்திபன், கீதாமுரளி எம்.சி., 124 அவட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு*

*கழக தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குபவர் : சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி.*

*இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள்: எஸ்.மோகன், நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசாதன், ஜெ.அருண், கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், கோ.சு.மணி, செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளி, அ.பாபு, யோகேஷ்ரவி, வேலுசம்பந்தம், எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கர்,*

*மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி.முருகையன்.*

*வட்டசெயலாளர்கள்: டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா அன்பழன், எஸ்.சரவணன், எஸ்.பானுசலீம், விஜய்வெங்கடேசன், ஆர்.கதிரவன், ஆர்.பானு, மோனிஷா, சி. கணேஷ் பாண்டியன், ம.ஆனந்தன், புலியூர் டி.மோசஸ், ச.சண்முகநாதன், சாந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ராஜ், ஆர்.குமரன், ஏ.சத்தியமூர்த்தி, கோ.சக்திவிக்னேஷ் என்.எஸ்.பாலசுப்பிரமணி, இரா.சக்கரவர்த்தி, கே.வெங்கட்ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா,*

*மயிலை கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள்: த.விக்னேஸ்வரன், தினேஷ்மாணிக்கம், லஷ்மி உதயகுமார், ரேவதி பொன்னுசாமி, சுசீலா, சாந்தகுமார், வே.மணிகண்டன், த.மதன், ஜி.கே.நரசிம்மன், ஞானபிரபு, எம்.சதீஷ், இரா.க.இளங்கோவன், ஜி.எம்.செல்வராஜ், பாட்ஷா ஆ.உத்திரியம், டி.மோகனவேலன், டி.கண்ணன், ஜே.சசிகுமார், ஐஸ்டின்டி கே.செந்தில்வேல், பா.நிவிதா, என்.குமார் இ.ஞானபிரகாஷ், என்.இளங்கோவன், மா.பா.தாமு, பி.சதீஷ்குமார்,*

*மயிலை கிழக்குபகுதி அமைப்பாளர்கள் : ஸ்டோன் வீ.அருண்குமார், த.தீபன், சு.மோகன், டில்லி ராணி, எஸ்.சுனில், மு.முகமதுயூசுப், சே.விவேக்ராஜன், ஜான்பிரிட்டோ, டி.ஜெகதீஸ்பாபு, அ.பிரிட்டோ, கவிதாகுமரிமுத்து, க.கணபதி மற்றும் பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுகிறேன்.*

*நன்றியுரை: பி.ரமேஷ், மு.உதயசூரியன், சா.ராஜீ, தா.வின்சென்ட், ம.ஜெயகோபி, ஆர்.கலைசேகரன், கே.கந்தவேல்.*

---

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு ! மாஸ்.டி.வெங்கடேசன் தலைமை !

## ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் பொங்கல் விழா !கழக நிர்வாகிகளுக்குப் புத்தாடைகள் !

### ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் - தா.இளையஅருணா வழங்கினார் !

*சென்னை, ஜன.13-*

*சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழகம் சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் மாஸ்.டி.வெங்கடேசன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் (10.1.2024 புதன்கிழமை) மாலை பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி நகரமைப்புக்குழு தலைவர் தா.இளைய அருணா கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு கழக முன்னோடிகளுக்கு புத்தாடைகள் மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார்.*

*இதில் கிழக்கு பகுதி செயலாளர் இரா.இலட்சுமணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, டி. திராவிடசெல்வி, பி.சீனிவாசன்,எம். வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் கலைவாணன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எஸ்.விமலா, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.எம்.பரசுராமன், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கனேசன், எஸ்.எல்.சுந்தர், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.ராஜன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இர.பொன் இளவரசன், எஸ்.சொக்கலிங்கம், பா.வேதாசலம், மீஞ்சூர் முகுந்தன்,ஜி.ராஜா, டி.சங்கர், எம்.ஞானகிராமன், இ.ரவிகுமார், எஸ்.கென்னடி, எஸ்.அப்துல்ரகுமான், எஸ்.சுசிலா, கே.யுவராஜ்,பி.விஜயா, மூர்த்தி, ஆர்.கோவிந்தராஜ், எஸ்.பொன்ராஜ், என்ஃபீல்டு துரைராஜ், சுப்பிரமணி, வட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

---

சென்னை மேற்கு மாவட்ட

## தகவல் தொழில்நுட்ப அணியின் பயிற்சி வகுப்பு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டத்தில் தலைமை கழகம் அறிவித்துள்ள தகவல் தொழில் நுட்ப அணி முன்னெடுப்பு பயிற்சி வகுப்புகள் கூட்டம் இன்று (13-01-2024 - சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் கோடம்பாக்கம் ஆலிவ் மற்றும் பழத்தோட்டம் விருந்து அரங்கம் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞரணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை உரிமை அணி, கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, இலக்கிய அணி, அயலக அணி, மீனவர் அணி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி நெசவாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, வர்த்தகர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர், துணைத்தலைவர், துணை அமைப்பாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறார்கள்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# மாநில அரசுகளின் நிதியில் செயல்படுவதுதான் ஒன்றிய அரசு!

இந்திய திருநாட்டினை இன்றைக்கு ஆளுகிற ஒன்றிய அரசு மக்களின் மனநிலையைப் புரியாமல் ஒட்டு மொத்த இந்தியாவில் இருக்கிற மாநில அரசுகளின் வரி மூலதனத்தில் இருந்து மக்களின் உழைப்பின் மூலம் கொடுக்கப்படுகிறது.

செயல்படுகிற ஒன்றிய அரசுக்கு நேரடியாக எந்த சூழ்நிலையிலும் வெளிநாட்டிலிருந்தும் வருமானம் வருவதில்லை. எந்த விதத்திலும் வருமானம் நேரடியாக வருவதில்லை. எல்லா வருவாயும் ஒன்றிய அரசுக்கு இந்தியா முழுவதும் வாழுகிற மக்கள் தங்களது தொழில் மூலம் சம்பாதிக்கிற பணத்தில் வருமான வரி என்றும் தொழில் வரி என்றும் தொழிலாளர்களுக்கு செலுத்துகிற வரி என்றும் ஒட்டுகிற வாகனங்களுக்கு சாலை வரி என்றும் எல்லா விதத்திலும் ஒன்றிய அரசுக்கு வருகிற வருவாய் மக்களின் உழைப்பால் கிடைக்கிற வருவாய்தான் என்பதை மறந்து விட்டு மாநில அரசுகளுக்கு கொடுக்கிற நிதி என்பது ஒன்றிய அரசு நிதி, ஒன்றிய அரசு நிதி என்கிறார்கள்.

ஒன்றிய அரசுக்கே நிதி கொடுப்பவர்கள் மாநில அரசுகளும் மாநிலங்களில் வாழ்கிற மக்களும் தான்.

அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் மூலம் கிடைக்கும் வரிப்பணத்தில் அதிகமாகவே செலவு செய்வதாகவும், வழங்கி இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அதாவது மெட்ரோ ரயில்வே திட்டம் சென்னையில் இருந்து பெங்களூர் வரை, புதிதாக அமைக்கும் எக்ஸ்பிரஸ் ஹைவே சாலை திட்டம், பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப். இந்தியா கோச் ஃபேக்டரி மூலம் தயாரிக்கப்படும் வந்தே பாரத் ரயில் பெட்டிகள் தயாரிக்கும் நிறுவனத்தில் இருந்து நான்கு ரயில்கள் தமிழ்நாட்டிலே விட்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

மெத்தப் பணிவோடு ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்; தமிழகத்தில் மக்கள் கடினமாக உழைத்து வருமான வரி மூலம் ஆண்டுக்கு 2014 இல் இருந்து இதுவரை சுமார் ரூ.90 ஆயிரம் கோடியில் இருந்து ரூபாய் ஒரு லட்சம் கோடி வரை ஆண்டுக்கு வருமான வரி என்று செலுத்தியது. இந்த ஒன்பது ஆண்டுகளில் ரூ. 8,20,000 கோடிக்கு மேல் செலுத்தி இருக்கிறார்கள்.

வியாபாரிகள், கடைக்காரர்கள், சிறு, குறு, தொழில்புரிபவர்கள், பெரிய தொழில் நிறுவனங்கள் மூலம், தொழில் துறையில் ஜி.எஸ்.டி. ஒவ்வொரு மாதமும் சராசரியாக ரூ.8,000 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.10,000 ஆயிரம் கோடி வரை அரசுக்கு செலுத்தி அதில் 50% மாநில அரசுக்கும் 50 %சதவீதம் ஒன்றிய அரசுக்கும் என்ற அடிப்படையில் ஒரு ஆண்டில் சுமார் ஒரு லட்சம் கோடிக்கு மேல் ஜி.எஸ்.டி. இருந்து மட்டும் ஒன்றிய அரசுக்கு வருமானமாக தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கிறது. அதிலிருந்து ஒன்றிய அரசு அதிக நிதியை கொடுக்க வேண்டுகிறேன்.

அது இல்லாமல் கலால் வரி, சுங்க வரி, சாலை வரி, தொழில் வரி, தொழிற்சாலைகள் பதிவு செய்கின்ற பதிவாளர்கள் அலுவலகத்திற்கு செலுத்துகிற வரி உட்பட ஏராளமான திட்டங்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு வரியாக கிடைக்கிறது.

ரயில்வே துறையில் தென்னக ரயில்வே மூலம் தமிழ்நாட்டில் இருந்து பார்சல்கள் கையாளுகிற கூட்ஸ் வாகனம் மூலம் மட்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் வருமானமாக ஒன்றிய அரசின் ரயில்வே துறைக்கு கிடைக்கிறது. பயணிகள் கட்டணமாகவும் பல்லாயிரம் கோடி ரூபாய் ரயில்வே துறைக்கு கிடைக்கிறது.

தமிழக மக்கள் மூலம் கிடைக்கிற வருவாயிலிருந்து ரயில்வேத்துறை முறையாக தமிழ்நாட்டுக்கு செலவு செய்யவில்லை என்பதை ஒன்றிய நிதி அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் ஏராளமான ரயில் பாதைகள் மீட்டர் கேஜ் பாதையை பிராட்கேஜ் அகலப்பாதையாக ரயில்வே பாதைகள் அமைக்க வேண்டிய இடங்கள் ஏராளமாக உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் இருந்து சத்தியமங்கலம் வழியாக மைசூருக்கு ரயில்வே பாதை அமைக்க வேண்டி பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டு திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கி ஆய்வுகள் எல்லாம் செய்த பிறகு அது கிடப்பில் இருக்கிறது. அதையும் ஒன்றிய நிதி அமைச்சர் கவனத்தில் கொண்டு தமிழகத்திற்கு, ஒன்றிய அரசுக்கு ரயில்வே துறைக்கு வருகிற வருமானத்தில் ஒரு 75% தொகையை தமிழ்நாட்டுக்கே செலவு செய்யுங்கள் என்று கேட்கிறோம்.

வருமான வரித் துறைக்கு தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கும் வருவாயில் ஒரு 50 சதவீத தொகையை தமிழ்நாட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்தால் தொழில் புரிபவர்களுக்கு வருமான வரி கட்டுகிறவர்களுக்கு அந்த தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகளுக்கு இன்னும் அதிகமான அபிவிருத்தி திட்டங்களை அடிப்படை திட்டங்களை செய்து கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். அதற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிதிகொடுப்பார்களா?

சாலை வரியாக தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் கார்கள், லாரிகள், இருசக்கர வாகனங்கள் உட்பட எல்லா வாகனங்களுக்கும் பல்லாயிரம் கோடி ரூபாய் சாலை வரியாகப் பெறப்படும் அந்த தொகையில் 50% தமிழகத்தில் ரோடுகள் பராமரிப்புக்கு மாநில நெடுஞ்சாலைத் துறை சாலைகளை தேசிய நெடுஞ்சாலை துறை சாலைகளை இன்னும் அகலப்படுத்துவதற்கு செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்குவதற்கு ஒன்றிய நிதி அமைச்சர் முன்வருவாரா?

தமிழ்நாட்டில் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து வெளிநாட்டு விமான நிலையத்துக்கு ரூ.1600 கோடி செலவு செய்ததாக ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த விமான நிலையங்கள் மூலம் வருகிற வருவாய் ஒன்றிய அரசுக்கு மாதத்திற்கே பல்லாயிரம் கோடி ரூபாய் என்றால் ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் விமான நிலையங்கள் மூலம் கிடைக்கிறது என்பதனை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக தெரிவிக்க வேண்டும். தமிழகத்திலிருந்து கிடைக்கிற பணத்தில்தான் நீங்கள் தமிழக விமான நிலையத்திற்கு அதில் ஒரு பகுதியை தான் செலவு செய்திருக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களின் உழைப்பால் ஒன்றிய அரசுக்கு கொடுக்கிற நிதி என்பது பல்லாயிரம் கோடி ரூபாய் அல்ல பல லட்சம் கோடி ரூபாய்.

தமிழகத்தை பொறுத்தவரை இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைகள் இந்தியாவிலேயே அதிகமாக ஒன்றிய அரசுக்கு வருவாய் கொடுக்கிற மாநிலங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.



**கோவை செல்வராஜ்**
கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்

மக்கள் தொகை அடிப்படையில் உத்தரபிரதேசத்திற்கு, மத்திய பிரதேசத்திற்கு, ராஜஸ்தானுக்கு, குஜராத்துக்கு நீங்கள் அதிக நிதி ஒதுக்குகிறோம் என்று ஒன்றிய அரசு சொல்லுகிறது. தயவு செய்து ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே மக்கள் தொகை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு வேண்டுகோள் விட்ட பொழுது தமிழகத்தில் மக்கள் அரசின் கோரிக்கையை நிறைவேற்ற இன்றைக்கு மக்கள் தொகை கட்டுப்பாட்டோடு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

தமிழ்நாட்டுக்கு எல்லா வசதி வாய்ப்புகளும் அதிகமாக கிடைத்துவிட்டது அது கிடைக்காத மாநிலங்களுக்கு நாங்கள் அதிகமாக நிதி உதவி கொடுக்கிறோம் என்று சொல்லுவது நியாயம் அல்ல.

அதிக மக்கள் தொகை இருக்கும் மக்கள் கடினமாக உழைத்து தொழிற்சாலைகளை நிறுவி அதன் மூலம் வருவாயை பெருக்கிக் கொள்ள வேண்டும் அதற்கு பதிலாக அதிக வருவாய் கொடுக்கிற மாநிலங்களுக்கு நிதியை கொடுக்காமல் அந்த நிதியை உழைக்காமல் இருக்கும் மாநிலங்களுக்கு கொடுக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம்.

எந்த பாகுபாடும் இல்லாமல் முறையாக பங்கிட்டு நிதியை ஒதுக்க வேண்டும். ஒன்றிய நிதி அமைச்சர்தான் இதற்கு எங்களுக்கு தெளிவாகப் பதில் சொல்ல வேண்டும்.

தமிழக மக்கள் 95% சதவீத பேர் இன்றைக்கு படித்தவர்களாக இருக்கிறார்கள்

ஏதோ தேர்தல் காலம் என்பதால் கடுமையான விவாதங்களை எடுத்து வைக்கும் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசு முதலமைச்சர் தளபதி அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லா பள்ளிக் குழந்தைகளுக்கும் காலை உணவு, மதிய உணவு வழங்கி படிக்க வைப்பது முதல் இடத்தில் தமிழகம் உள்ளது. அதற்கு காரணம் அந்தக் குழந்தைகள் வாக்களிப்பார்கள் என்று அல்ல..

அனைத்து குழந்தைகளையும் காக்க வேண்டும். தமிழகத்தில் இருக்கிற குழந்தைகள் நல்ல சுகாதாரத்தோடு நோயற்ற உடல் நலத்தோடு படிக்க வேண்டும் எதிர்காலத்தில் அவர்கள் பெரிய சக்தியாக வளர வேண்டும், என்பதற்காகத்தான். தமிழகம் வளர்ச்சி பெறுவதற்காக எல்லா திட்டத்தையும் தமிழக மக்களை காக்க வேண்டும் என்பதற்காக திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

2019ல் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அறிவித்து நான்கு ஆண்டுகள் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 12 கோடியே 35 லட்சம் ரூபாய் மட்டும் நிதி ஒதுக்கி ஆய்வு செய்து நிறுத்தி விட்டார்கள் பணிகள் தொடங்க நிதி ஒதுக்கவில்லை.

இதுவரை இந்த மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையோடு சேர்ந்து அடிக்கல் நாட்டிய உத்தர பிரதேசம், கோரக்பூர் ரூ.874 கோடி ஒதுக்கீடு அசாம் போன்ற மாநிலங்களில் எல்லாம் எய்ம்ஸ் மருத்துவமனை மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் இன்னும் எந்தப் பணியும் நடக்காமல் அப்படியே உள்ளது. என்ன காரணம் என்பதை ஒன்றிய நிதிஅமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

ஒன்றிய அரசு விளையாட்டு துறையில் 2019 லிருந்து 2023 வரை நான்கு ஆண்டுகளில் ஒதுக்கிய தொகை கர்நாடகா ரூ.127 கோடியே 25 லட்சம், குஜராத் ரூ.586 கோடியே 99 லட்சம்

உத்தர பிரதேசம் ரூ.346 கோடி, மணிப்பூர் ரூ.27 - 11கோடி, ஹரியானா ரூ.45 கோடி 74 லட்சம், பஞ்சாப் ரூ.46 கோடி - 20 லட்சம், தமிழ்நாடு ரூ.19 கோடி.

இந்தியாவில் தமிழகத்தை ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதில் புறக்கணிப்பதை ஒன்றிய நிதியமைச்சர் இல்லை என்று சொல்லுவாரா? குறைத்து நிதி வழங்கியதை ஏற்றுக்கொள்கிறாரறா?

2024 இல் பாராளுமன்ற தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் ஒன்றிய அரசு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்கள்.

540 ரயில்வே நிலையங்கள் புதுப்பிக்க ரூ.54,000 கோடி ராஜஸ்தான் மத்திய பிரதேசம் மாநிலங்களுக்கு ரூ.80 ஆயிரம் கோடி ரயில்வே விரிவாக்க திட்டத்திற்கு ரூ.32 ஆயிரத்து 500 கோடி, மின்சார பஸ் சேவை பத்தாயிரம் பஸ்கள் வாங்க ரூ.57 ஆயிரத்து 613 கோடி ஒன்றிய அரசு பங்கு இருபதாயிரம் கோடி ரூபாய்.

இந்தத் திட்டங்கள் எப்படி ஐந்து மாத காலத்திற்குள் நிறைவேற்ற முடியும் என்பதனை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமாக பதில் அளிக்க வேண்டும்.

ரயில்வே திட்டங்களில் ரயில் நிலையங்கள் பராமரிப்புக்கு ஒதுக்கிய நிதிகள் அகமதாபாத் டெல்லி, மும்பையில் நிலையங்கள் பறாமறிக்க பத்தாயிரம் கோடிக்கு மேல் வடக்கு ரயில்வே திட்டத்திற்கு ரூ.13 ஆயிரத்து இருநூறு கோடி. தெற்கு ரயில்வே திட்டத்திற்கு ரூ.59 கோடி இந்த வஞ்சகம் மிக்க நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கமாக எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

குறிப்பாக பிரதமரின் பயிர் காப்பீட்டு நிதி முன்பு ஒதுக்கப்பட்டது ஒன்றிய அரசு 49 %சதவீதம் மாநில அரசு 49% சதவீதம் விவசாயிகள் 2%சதவீதம் என்று இருந்ததை இப்பொழுது மாற்றியமைத்து மாநில பங்கு 73% சதவீதம் ஒன்றிய அரசு பங்கு 25% பங்கு விவசாயிகள்2%ஒன்றிய அரசு விளக்கம் தந்தால் விவசாயிகள் தெரிந்து கொள்வார்கள்.

சமஸ்கிருதம் மொழி ஆய்வுக்கு 1487 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது செம்மொழி ஆய்வு 74 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பேரிடர் நிதி ஒதுக்கீட்டில் 15வது நிதி குழு, தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது 64.65% சதவீதம், உத்தர பிரதேசத்திற்கு ஒதுக்கிய நிதி 214.39 %சதவீதம்.

2014 -15 முதல் 2021- 22 வரை நேரடி வரியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 5-16% சதவீதம் கோடி தமிழ்நாட்டுக்கு திரும்ப கிடைத்தது 2-08% கோடி. உத்தரபிரதேசம் ஒன்றிய அரசுக்கு நேரடி வரியில் கொடுத்தது 2.24 கோடி ஒன்றிய அரசு உத்தர பிரதேசத்திற்கு கொடுத்தது நான்கு மடங்கு அதிகமாக 9-04% கோடி கொடுத்துள்ளது.

2014க்கு முன்பு ஒன்றிய அரசு நியாய விலை கடைகள் மூலம் வழங்கும் உணவு தானியங்களுக்கு

அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், பருப்பு மானியம் கொடுத்து வந்தது இப்பொழுது பிஜேபி அரசு வந்த பிறகு மானியத்தை முழுமையாக நிறுத்திவிட்டார்கள் அதனால் ஆண்டுக்கு 6000 கோடி ரூபாய் மாநில அரசுக்கு செலவு அதிகமாகிறது.

குஜராத் மாநிலத்திற்கு சி.ஏ.ஜி. அறிக்கையில் 2015 இருந்து 16 வரை 2542 கோடி ரூபாயும் 2019 லிருந்து 20 வரை 11,659 கோடி பட்ஜெட் கணக்குக்கு வராமலேயே நேரடியாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கிய முறை கேடுஎன்று சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது.

அதிக சதவீதம் நிதியை உத்திரபிரதேசத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்குவதால்தான் தமிழக நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு நாம் செலுத்திய ஒரு ரூபாய்க்கு 29 பைசா நமக்குத் திரும்ப கிடைக்கிறது என்றும் உத்தர பிரதேசத்திற்கு ஒரு ரூபாய்க்கு 2-, 73 பைசா ஈடாக ஒதுக்குகிறது.

எத்தனை மடங்கு அதிகமாக உத்தரபிரதேசத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. எதற்காக ஒருதலை பட்சமாக செயல்படுகிறீர்கள் என நாம் கேட்கிறோம்.



சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், நேற்று (12.1.2024) 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், அரசு முதன்மைச் செயலாளர்/ சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்/ மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் பல்கலைக் கழகத்தின் - முக்கியப் பதவிகளில்

## பிற்போக்காளர்களையும் ஜனநாயக விரோதிகளையும் ஆளுநர் ரவி அமர்த்தியுள்ளார்!

### ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

*சென்னை, ஜன. 13 -*

தந்தை பெரியார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தின் முக்கிய மான பதவிகளில் ஜனநாயக விரோதிகளையும், பிற்போக்காளர்களையும் ஆளுநர் ஆர்.என்.ரவி அமர்த்தியுள்ளார். இது அரசியல் சட்ட விரோதம் என ‘தீக்கதிர்’ நாளேடு 12.01.2024 அன்று தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

அத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதன் முறைகேடு மற்றும் வன்கொடுமை வழக்கில் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர்.

தனியார் நிறுவனமான பூட்டர் பவுண்டேஷன் மற்றும் பூட்டர் பார்க் நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிக் கல்வி, பாடத்திட்டம் வழங்குவது தொடர்பாகப் பல தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் முறைகேட்டில் ஈடுபடுவதாக அவர் மீது புகார்கள் நிலுவையில் உள்ளன. இதுமட்டு மல்ல, பா.ஜ.க. ஆதரவு தனக்கு இருப்பதால் பேராசிரியர்களை ஒருமையில் திட்டுவது, பட்டியலின பேராசிரியர்களை சாதி ரீதியாக அவமானப்படுத்துவது என அராஜகமாக நடந்துகொள்வது அவரது வழக்கம்.

பொதுவாக பல்கலைக் கழக துணைவேந்தர் நியமனங்களைப் பொறுத்தவரை மாநில அரசு ஒருவரைத் தேர்வுசெய்து அவரது பெயரை ஆளுநருக்கு பரிந்துரைக்கும். அந்த பெயருக்கு ஒப்புதல் வழங்குவது தான் ஆளுநரின் வேலை, ஆனால் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கூட்டாட்சித் தத்துவத்தை சற்றும் மதிக்காமல், மாநில அரசு பரிந்துரைக்கும் நபரது நியமனத்திற்கு ஒப்புதல் வழங்க மறுப்பது அல்லது தனக்கு வேண்டியவர்களை துணைவேந்தராக நியமித்து மாநில அரசுக்கு குடைச்சல் கொடுப்பது ஆளுநர்களின் வேலையாக மாற்றப் பட்டுள்ளது.

தந்தை பெரியார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தின் முக்கிய மான பதவிகளில் ஜனநாயக விரோதிகளையும் பிற்போக்காளர்களையும் ஆளுநர் ரவி அமர்த்தியுள்ளார். அப்படிப்பட்ட ஒருவர் தான் ஜெகநாதன். அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் உள்ளபோதிலும் அவரை ரிமாண்ட் செய்ய மறுத்து அவருக்கு சேலம் குற்றவியல் நீதிமன்ற நடுவர் இடைக் கால



தீக்கதிர்
2024 ஜனவரி 12 வெள்ளிக்கிழமை
குற்றவாளிக்கு அடைக்கலம் தருகிறாரா ஆளுநர்?
சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதன் முறைகேடு மற்றும் வன்கொடுமை வழக்கில் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர். தனியார் நிறுவன மான பூட்டர் பவுண்டேஷன் மற்றும் பூட்டர் பார்க் நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிக் கல்வி, பாடத்திட்டம் வழங்குவது தொடர்பாகப் பல தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் முறைகேட்டில் ஈடுபடு

ஜாமீன் அளித்தது சட்டப்படி தவறு என்று மாநில அரசின் சார்பில் வாதிடப்பட்டு வருகிறது.

வன்கொடுமைத் தடுப்பு சட்டத்தின்கீழ் துணை வேந்தர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் சிறப்பு நீதிமன்றத்துக்கான அதிகாரத்தை குற்றவியல் நடுவர் எப்படி எடுத்துக்கொண்டார் என்ற விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளான நபரை ஆளுநர் சந்திப்பதும், அவருடன் பல்கலைக் கழக செயல்பாடுகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்துவதும் தமிழகம் இதுவரை கண்டிராத விசித்திரமாக உள்ளது.

ஆளுநர் ரவியின் இத்தகைய செயல், குற்றம் செய்வோருக்கு அடைக்கலம் தருவதே ஆகும். பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தருக்கு ‘எதையும் செய்யலாம் என்ற சமிக்ஞையை ஆளுநர் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆளுநர் போன்ற உயர்பதவியில் இருப்பவர்களின் இத்தகைய மோசமான செயல்பாடு இதோடு நிற்கப்போவதில்லை, நீதிமன்றத் திற்கும் தவறான வழிகாட்டுதல்களை தந்துவிடும். இது அரசியல் சட்ட விரோதம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தலைமை! தியாகராயர் நகர்

## 130 வது வட்டத்தில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கல்! கே.ஏழுமலை - எஸ்.பாஸ்கர் பங்கேற்பு!

*சென்னை, ஜன. 13*

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைப் படி, வட்டச் செயலாளர் டி.கமல் தலைமையில் இன்று (13.1.2024 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், 100 அடி சாலையில் உள்ள ஆர்த்தி மஹாலில் கழக உடன்பிறப்புகளுக்கு தமிழர் திருநாள் முன்னிட்டு பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி கலந்து கொண்டு கழக உடன்பிறப்புகளுக்கு பொங்கல் பரிசுகளை வழங்குகிறார்.

தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி எம்.பழனிகிராமணியார், 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர், என்.ராமகிருஷ்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் பில்டர் கே.சரவணன், தமிழ் எம்.பழனி, ஜி.ஜி.சேகர், எஸ்.ஆனந்தன், ஏ.கே.காசிம் மற்றும் வட்ட நிர்வாகிகள் வி.மணி, எஸ்.சரவணன், கே.பாபுஜி, எஸ்.விஜயலட்சுமி, வி.குமார், ஆர்.வி.ரத்தினசாமி, ஜி.தண்டபாணி, டி.ஜி.சீனிவாசன், ஆர்.சதாசிவம், ஆர்.விஜயராமகிருஷ்ணன், எம்.சுரேஷ், சி.சுந்தர், இ.ஜெயக்குமார், ச.கணேஷ், குழந்தைவேலு, பி.ஸ்ரீதர், டி.ரவி, எம்.கிருஷ்ணன், சி.மகேஷ், சி.எஸ்.அசோகன், மணி, என்.சுந்தரம், ந.அசோக், சி.ஹரிவேலவன், பி.செல்வம், ப.ஹரி, அருள்சேகர், கே.ஆர்.பாபு, செந்தில்குமார், ர.பழனி, நித்தியானந்தன், ஜெனித்தா, டி.சித்ராதேவி, திலகவதி, கலா, குமாரி, என்.விஜயலட்சுமி மற்றும் கழக உடன்பிறப்புகள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கு மாறு வட்டச் செயலாளர் டி.கமல் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட பிரதிநிதி

## எம்.பி.மாறன் தந்தை ம.மணி முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

### மயிலை த.வேலு.எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.பங்கேற்பு!



*சென்னை ஜன.13-*

சென்னை தென்மேற்கு மாவட்ட பிரதிநிதி எம்.பி.மணிமாறன் நினைவில் வாழும் பாட்ஷா (எ) எம்.முரளி, தியாகராய நகர் கிழக்கு பகுதி ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் எம்.வாசு ஆகியோரின் தந்தை கழக மூத்த முன்னோடி முன்னாள் மாவட்ட பிரதிநிதி ம.மணி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு அன்னாரது படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (13.01.2024) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் எண் 35 பஜனை கோயில் தெரு, சைதை சாலை வடபழனி சென்னை.26.என்ற முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு திருவுருவப்படத்தை படத்தை திறந்து வைக்கிறார்.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமை வைக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை கோ.சு.மணி சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

135 வது வட்டக் கழக செயலாளர் எம்.எஸ்.பழனி, மு. சத்யா, செ.க.பார்த்திபன், ஜி.டி.அம்பேத்கர், இரா. பொன்னிவளவன், வி.பி.எஸ். ஜனார்த்தனன், புதூர் ஆர். லோகு, டி.ஸ்ரீதர், எஸ்.சத்யா, ஏ.சந்திரசேகரன், கே.பாலாஜி, வி.பி. எஸ்.ஜெயசீலன், எம். செல்வம் மற்றும் தியாகராய நகர் கிழக்கு பகுதி 135 வது வட்ட தி.மு. கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அன்னாரது படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.



சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு 137 வது வார்டு, அய்யாபுரம் பகுதியில் 650 நபர்களுக்கு விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தலைமையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கினர். இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேகசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர் சதீஷ் கண்ணன், இரா.செழியன், பூக்கடை பழனிச்சாமி, அ.கதிரேசன், மு.கோவிந்தராஜ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் சேலம் 2 வது இளைஞர் அணி மாநில மாநாடு நிதியாக ரூபாய் ஒரு கோடியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிஷங்கர், தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் ஆகியோர் உள்ளனர்.



சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற ”அயலகத் தமிழர் தினம் 2024 விழாவில் நேற்று (12.01.2024) தமிழ் வளர்ச்சி துறை சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய பிரிவுகளில் கனடா பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா மனோன்மணி தேவி, கொரியாஆரோக்கியராஜ், சிங்கப்பூர் மா.அன்பழகன், கனடா சு. தீனதயாளன், வேல்ஸ் மதன் எஸ். ராஜா ஆகியோருக்கு உலகத் தமிழ்ச் சங்க விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான்,தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன்

# தமிழ்நாடு அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் இன்று சந்திப்பு!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் செல்லும் இக்குழு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணம் வழங்க வலியுறுத்துகிறது!

சென்னை, ஜன.13-

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சி குழுவினர் இன்று (13.1.2024 சனிக்கிழமை) சந்திக்க உள்ளனர். தமிழ்நாடு அரசு கோரிய 37 ஆயிரத்து 907கோடி ரூபாய் வெள்ள நிவாரண தொகையை உடனடியாக வழங்குமாறு அவர்கள் வலியுறுத்த உள்ளனர்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்களில் கடந்த டிசம்பர் மாதம் 3,4 ஆகிய தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக அதி கனமழை வெளுத்து வாங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது. மற்ற மூன்று மாவட்டங்களில் பாதிப்புகளை சந்தித்த வட்டங்களில் மட்டும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

இதேபோல், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் சென்று பெரும் பாதிப்பு ஏற்பட்டது. வெள்ள சேதங்களை பார்வையிட நெல்லை சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அதிக பாதிப்புள்ள இடங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 19ம் தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடியை சந்தித்து, தமிழ்நாட்டின் கனமழை, வெள்ளத்தால் வட மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் அடுத்தடுத்து பாதிக்கப்பட்டிருப்பதை இயற்கை பேரிடராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை சீர் செய்ய கோரியபடி, தற்காலிக நிவாரணமாக 7ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரண தொகையாக 12ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்குமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரணத்தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தி, அனைத்துக் கட்சி எம்.பிக்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து வலியுறுத்துவார்கள் என முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சிக்குழு வருகிற சனிக்கிழமை சந்திக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையிலான இக்குழுவில், காங்கிரஸ் சார்பில் ஜெயகுமார், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்பராயன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நடராஜன், விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் ரவிகுமார், முஸ்லீம் லீக் கட்சியின் நவாஸ்கனி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சின்ராஜ் ஆகியோர் இடம்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகள் வயல்களிலிருந்து பெறப்பட்ட

# காய்-கனிகள் “நம்ம சென்னை நம்ம சந்தை” மூலம் விற்பனை!

## வேளாண்மையின் தோட்டக் கலைத்துறை அறிவிப்பு!

சென்னை,ஜன.13-

விவசாயிகள் வயல்களிலிருந்து பெறப்பட்ட காய்கனிகள் 24 மணி நேரத்திற்குள் சென்னையில் ‘ப்ரஸ்’ ஆக கிடைத்திடும் வகையில் வேளாண்மைத் துறையின் தோட்டக்கலை ‘நம்ம சென்னை நம்ம சந்தை’ என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

விவசாயிகளின் வயல்களில் இருந்து காய்கறிகளை நேரடியாக பெற்று அதனை சுவைக்க நம்ம சென்னை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. குறிப்பிட்ட கால கட்டத்தில் குறிப்பிட்ட மாவட்டத்தில் விளையக் கூடிய காய்கறிகளை 24 மணி நேரத்தில் விவசாயிகளின் வயல்களிலிருந்து பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. வாரந்தோறும் சென்னை செம்மொழிப் பூங்காவில் இரண்டு நாட்கள் (வெள்ளி மற்றும் சனி காலை வேளைகளில் மட்டும்) பாரம்பரிய காய்கறிகள், கீரைகள், கிழங்குகள், பழங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியன செம்மொழிப் பூங்காவில் உள்ள டான்ஹோடா விற்பனை மையத்தில் விற்பனை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் துணிப்பை (மஞ்சப்பை) கொண்டு வந்து வாங்குவோருக்கு 5% சலுகை வழங்கப்படும்.

பாரம்பரிய காய்கறிகளின் பட்டியல்:

கறிவேப்பிலை செங்காம்பு, வெள்ளை பாகல் (கோவை)

பழு பாகல், மஞ்சள் பூசணி, சக்கரைவள்ளி கிழங்கு (இளஞ்சிவப்பு நிறம்) (திண்டுக்கல்)

மலைப்பூண்டு (கொடைக்கானல்)

காந்தாரி மிளகாய் (கன்னியாகுமரி)

எறையூர் சேப்பங்கிழங்கு, உளுந்தூர்பேட்டை கருணை கிழங்கு (கள்ளக்குறிச்சி)

கண்ணாடி கத்தரி (நாமக்கல்)

ஊர் அவரை (சேலம்)

புளியங்குடி எலுமிச்சை, வெள்ளைக்கத்தரி பாவூர்சத்திரம்

வெண்டை, (தென்காசி)

சிறுகிழங்கு (திருநெல்வேலி)

இலவம்பாடி முள் கத்தரி (வேலூர்)

கோவைக்காய் (விழுப்புரம்)

அதலக்காய், சாத்தூர் வெள்ளரி (விருதுநகர்)

மூக்குத்தி அவரை, சிறகு அவரை, பூனைக்காலி அவரை (திருப்பூர்)

இதர காய்கறிகளின் பட்டியல்:

கீரைகள் (வெந்தயகீரை, சிறுகீரை, அரைகீரை, பருப்பு, கீரை, பாலக்கீரை, மணத் தக்காளி கீரை) வேலூர் மாவட்டத்திலிருந்து

கறிபலா (கன்னியாகுமரி)

கிருஷ்ணகிரியில் இருந்து கொடைமிளகாய் (சிவப்பு, மஞ்சள், பச்சை)

சின்ன வெங்காயம் (பெரம்பலூர்)

புரோக்கோலி (பச்சைப் பூக்கோசு), சிவப்பு முட்டைக்கோசு, பேபி உருளைக்கிழங்கு, முள்ளங்கி (நீலகிரி)

ராணிப்பேட்டையிலிருந்து வாழைக்காய்

மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பட்டியல்:

பனங்கற்கண்டு (தூத்துக்குடி)

பனங்கிழங்கு (ராமநாதபுரம்)

மஞ்சள் கொத்துகள் (ஈரோடு)

தேங்காய் பூ (தருமபுரி)

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் சென்னை மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூபாய் 3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என 2003–2004 ஆம் ஆண்டு புதிய அறிவிப்பாக வெளியிடப்பட்டது. அதன்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள 19 கல்லூரி விடுதிகளுக்கும், ஒரு பள்ளி விடுதிக்கும் ஒருங்கிணைந்த சமையலறையின் மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டத்தினை 11.1.2024 அன்று வேப்பேரி, அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திலிருந்து இதர விடுதிகளுக்கு உணவுகளை அனுப்புவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, அரசு கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஆர்.ஹேமலதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில்,

# 48-வது இந்திய சுற்றுலா - பொருட்காட்சி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன.13-

சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியின் தொடக்க விழா, தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலையரங்கில் நேற்று (12.01.2024) சிறப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியை தொடங்கி வைத்தார். மேலும் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களை பார்வையிட்டார்.

48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023-2024-ஐ யொட்டி, ”சுற்றுலா மற்றும் பசுமை முதலீடுகள்” என்ற இந்தாண்டிற்கான கருப்பொருளை மையமாக கொண்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, நான் முதல்வன் திட்டம், காவல்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, தொழில், முதலீடு மற்றும் வர்த்தகத்துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, சமூக நலத் துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, சி.எம்.டி.எ, ஆவின், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மாநகராட்சி உள்பட தமிழ்நாடு அரசுத் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அரங்கங்கள் 49, ஒன்றிய அரசு நிறுவனங்களின் 2 அரங்கங்கள், என மொத்தம் 51 அரங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்து சமய அறநிலையத்துறை அரங்கில் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலிருந்து பிரசாதங்கள் வருவிக்கப்பட்டு, பொருட்காட்சிக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு தினந்தோறும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரங்கில் முழு உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, இதய வரைவலை பரிசோதனைகள் உள்பட பல்வேறு மருத்துவ ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி அரங்கில் பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றி புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கவும், சில்லரை நாணயங்கள் மற்றும் புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இவை தவிர தனியார் கடைகள், அரங்கங்கள் அமைக்கப்பட்டு பொருட்காட்சி நடைபெறுவதன் மூலம் நேரடியாக சுமார் 5,000 பேரும், மறைமுகமாக சுமார் 30,000 நபர்களுக்கும் வேவைவாய்ப்பை வழங்கியுள்ளது.

80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைந்துள்ளது. பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 12.00 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியினை தொடங்கி வைத்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்கட்சியை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு வந்ததில் எனக்கு பழைய நினைவுகள் வருகின்றன. நான் பள்ளியில் படிக்கும்போது, 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு எப்போதெல்லாம் சுற்றுலா பொருட்காட்சி நடைபெறுமோ அப்போதெல்லாம், என்னுடைய சகோதரிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த குடும்பத்தாருடன் பல முறை வந்து இந்த பொருட்காட்சியை சுற்றிப் பார்த்துவிட்டு செல்வது வழக்கம். இப்போது அதே பொருட்காட்சியை திறந்து வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது.

நான் பொறுப்பு வகிக்கக்கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரங்கமும் இந்த பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியாகும். என்னுடைய துறையின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கக் கூடிய பல்வேறு பணிகள், நிகழ்ச்சிகள், பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த விளக்கங்கள் அந்த அரங்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து துறைகளின் சார்பில் இந்த இரண்டறை ஆண்டு காலத்தில் என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று ஒவ்வொரு அரங்கத்திலேயும் சிறப்பாக விளக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பத்திரிக்கை நண்பர்களெல்லாம், கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டு அனைத்து பொதுமக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பொருட்காட்சியை திறக்கின்ற வாய்ப்பு கிடைத்தும் என்னால் வரமுடிய வில்லை. அடுத்த 70 நாட்கள் இந்த பொருட்காட்சி நடைபெற இருக்கின்றது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பொருட்காட்சியை பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு, பொருட்காட்சியின் நோக்கத்தை வெற்றியாக்கி காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ. பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்/மேலாண்மை இயக்குநர், திருமதி. காகர்லா உஷா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் முத்தியால்பேட்டை ஊராட்சியில் சமத்துவப் பொங்கல் விழாவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் பி.சேகர், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர். பி.அன்பழகன் மற்றும் மு.க.ஜெயராமன், எம்.பழனி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# உடன்பிறப்பே... 40

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த தாழை மு.கருணாநிதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




# தாழை மு.கருணாநிதி : கலைஞர் பெயரில் ஒரு தளகர்த்தர்!

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர், 1950-ஆம் ஆண்டுகளில் அன்றைய தஞ்சை ஜில்லாவின் அரசியல் எழுச்சி மையமாக இருந்தது. நில உடைமையாளர்களின் சாணிப்பால், சவுக்கடிக் கொடுமைகளுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டங்களை நடத்திய பூமி அது. காங்கிரஸ் செல்வாக்குக்கு எதிராக விவசாயத் தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்கிக் கொண்டிருந்தனர் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியினர். திராவிட இயக்கத்தின் செல்வாக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்னணித் தலைவராகத் திகழ்ந்த கலைஞரின் களப்பணியும் 50 களில் திருவாரூரை அரசியல் பரபரப்பான ஊராக மாற்றி இருந்தது. சற்றேறக்குறைய அந்த நாட்களில் ஐந்து வயது சிறுவனாக இருந்தார், இந்த வாரம் 'உடன்பிறப்பே' தொடரில் இடம் பெறும் கழகத்தின் பெரும் தொண்டர் தாழை மு.கருணாநிதி. அவர் பிறந்த தேதி ஜனவரி 1, 1945.

திருவாரூரில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அம்மையப்பன் எனும் ஊருக்கு அருகில் உள்ள கிராமம் தாழைக்குடி. அந்த கிராமத்துக்கு முறையான சாலை வசதிகூட அப்போது கிடையாது. ஆனால், அரசியல் நுழைந்திருந்தது. தாழை மு.கருணாநிதி அவர்களின் தந்தையார் முருகையன், விவசாயத் தொழிலாளி என்றாலும், அன்றைய காங்கிரஸ் கட்சியில் செயல்பட்டு வந்தவர். உள்ளூர் பண்ணையார்கள் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் முருகையன் அவர்களின் சொல்லுக்கு மதிப்பு இருந்தது.

## தந்தையின் செல்வாக்கு

வறுமையில் இருந்தும், பண்ணையடிமை முறையில் இருந்தும் மீண்டிருந்தவர் என்பதால், தனது மகனை அம்மையப்பனுக்குக் கல்வி பயில அனுப்பினார். அப்படிப் படிக்க வந்த கருணாநிதிக்கு, அம்மையப்பனில் தீவிரமாக இயங்கி வந்த பெரியார் இயக்க அறிமுகம், தி.மு.க தொடர்புகள் அவரை மாணவர் தி.மு.க வில் ஐக்கியம் ஆக்கின.

அவரது 12வது வயதில் தி.மு.கழகம் முதல்முறையாகத் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக இருந்தபோது, முருகையன் திருவாரூர் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்குகிறார். அப்போது, இரட்டை வாக்குரிமை என்பதால், தாழ்த்தப்பட்டவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். ஆனால், பண்ணையார்களின் கையாள்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள் என்பதால், தனிப்பட்ட செல்வாக்குடன் இருந்த முருகையன் சுயேட்சையாக ஆலமரம் சின்னத்தில் போட்டியிட்டார். அவருக்கு சுதந்திரா கட்சி ஆதரவு அளித்திருந்தது. முருகையன் வெற்றி பெறவில்லை என்றாலும், தனது மகன் அரசியல் கற்றுக் கொள்வதற்கு, அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான முயற்சிகளைப் புரிந்து கொள்வதற்கு அது பாடமாக இருந்தது. அப்படித்தான் தாழை மு.கருணாநிதி உருவானார்.

தாழை அவர்களின் 20-வது வயதில் தி.மு.கழகம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டமும், விலைவாசி உயர்வுப் போராட்டமும் மிகத் தீவிரமாக இருந்தது. டெல்டா மாவட்டங்களில்தான் நெல் கடத்தல் சம்பவங்களும் அப்போது நடைபெற்றன என்பதால், கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் போராட்டங்களில் அப்பகுதியில் தாழை தீவிரமாக இருந்தார். போராட்டத்தின் போது உண்ணாவிரதம் இருந்து கைது செய்யப்பட்டார்.

## சவாலான கழகப்பணி

திருவாரூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காங்கிரஸ் செல்வாக்கை இழந்து கொண்டிருந்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு செலுத்தத் தொடங்கி இருந்தது. அதே காலத்தில் தி.மு.கவை வளர்ப்பதை சவாலான பணியாக ஏற்றுச் செய்தவர் தாழை.

காங்கிரஸில் இருந்து விலகி, தி.மு.கவில் இணைந்தால் காங்கிரஸ்காரர்கள் அடிப்பார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகி, தி.மு.க.வில் சேர்ந்தால், அந்தக் கட்சியினரும் அடிப்பார்கள். இப்படி அடிக்கு பயந்து கட்சி மாறாமல் இருக்கும் மக்களை தி.மு.கவுக்குக் கொண்டு வருவது எப்பேர்ப்பட்ட சவால் என்பதை அந்தக் காலத்தைக் கண்முன் நிறுத்தி புரிந்து கொள்ளலாம்.

அப்படித்தான் அவர் அம்மையப்பன் பகுதியில் தி.மு.க.வை அசைக்க முடியாத தூணாக எழுப்பினார்.தாழைக்குடி பஞ்சாயத்துத் தலைவர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத் துணை பெரும் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர், தஞ்சை மாவட்ட நலக்குழு உறுப்பினர் என அடுத்தடுத்துப் பொறுப்புகள் அவரைத் தேடி வந்தன.

முத்தமிழறிஞர் கலைஞரின் விருப்பத்திற்குரிய தாழை மு,கருணாநிதிக்கு 1971-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை அளித்தார் கலைஞர். மிசா நெருக்கடி நிலை காலத்தின் போது ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த வருக்குத் திரும்பவும் திருவாரூர் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பு அளித்தார் கலைஞர்.

**மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால் உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்**

தாழையின் உழைப்பை அறிந்த கலைஞர் 1980ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது நாகப்பட்டினம் தொகுதியில் இருந்து மக்களவை உறுப்பினராக்கி, அனுப்பி வைத்தார்.

## கலைஞரின் ஆசை

மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து, தஞ்சை ஜில்லா கழக வளர்ச்சியைக் கவனித்த அவரை மாவட்டச் செயலாளராக்கி அழகு பார்த்தார் கலைஞர். இப்படி இளம் வயதிலேயே அடுத்தடுத்த பொறுப்புகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர் தாழை மு.கருணாநிதி

மாவட்டச் செயலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒரே நேரத்தில் அவரே இருந்ததால் 'நான் ஒரு பொறுப்பில் மட்டும் இருந்து கொள்கிறேன்' என கலைஞரிடம் உரிமையோடு சொன்னவர் தாழை.

சிறப்புடன் பணியாற்றிக் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்ட அவர் 1986 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி திடீரென உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

துடித்துப்போன கலைஞர், திருவாரூருக்குச் சென்று அஞ்சலி செலுத்தியதுடன், தனது உடன்பிறப்புக்காகப் பெரும் இரங்கல் குறிப்பு எழுதினார். "அனைவரிடமும் சகோதரப் பாசத்துடன் பழகக்கூடிய நற்பண்பாளர் தாழை மு.கருணாநிதி. மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கே அதிக வாய்ப்புகளைத் தர வேண்டும் என்பது என் ஆசை. எனது சொந்த மாவட்டத்திலேயே தாழை மு.கருணாநிதி மூலம் அந்த ஆசை நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்" என முத்தமிழறிஞர் கலைஞர் புகழாரம் சூட்டினார்.

தி.மு.கழகம் தேர்தலைச் சந்தித்த காலத்திலிருந்து திருவாரூர் தொகுதி கழகத்தின் கோட்டையாக இருக்கிறது. கலைஞர் அதை உருவாக்கினாலும், தாழை மு.கருணாநிதி போன்றவர்கள் அதைக் கட்டிக் காத்தனர். கழகத்தவர்கள் உருவாக்கிய அந்த மண் என்றும் தாழை மு.கருணாநிதி புகழைப் போற்றிக் கொண்டிருக்கும்.

...துடிக்கும்

## சுக்கு நூறாக உடையும் பா.ஜ.க. பிம்பம்!




2014-இல் இருந்து மோடி படைத்த புதிய இந்தியாக்கள் எத்தனை எனத் தனி நூலே போடலாம். அந்த அளவுக்குப் பெரிய பட்டியலை பா.ஜ.க.வினர் நீட்டுவார்கள். ஆனால், வேலை யின்மை, சமத்துவமின்மை என மோடி ஆட்சியில் இந்தியா அடைந்து வரும் அசமத்துவம், நீர்த்துப் போயிருக்கும் ஜனநாயக விழுமி யங்கள், பா.ஜ.க.வின் போலி வாக்குறுதிகள் என, சீர்குலைவுச் சித்திரத்தின் சாட்சியே 10 ஆண்டுகால மோடி ஆட்சி.

அதுமட்டுமல்ல, புள்ளிவிவரங்களை மறைத்தல், தன்னாட்சி அமைப்புகளின் பார பட்சத்தன்மை, சிறுபான்மையினரை நிராக ரித்தல், பேரிடர்களைக் கையாள முடியாமையும் பா.ஜ.க ஆட்சி அலங்கோலங்களில் அடங்கும். இவற்றுக்குப் பின்னணியில் இருக்கிற பா.ஜ.க.வின் மதப் பெரும்பான்மைவாதம், சர்வாதிகாரப் போக்கு, தெளிவற்ற பொருளாதாரப் பார்வையைப் போட்டுடைத்த ஆங்கில நூல் 'தி க்ரூக்ட் டிம்பர் ஆஃப் நியூ இந்தியா'. ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான பரகால பிரபாகர் எழுதிய இந்நூலின் அதிர்வுகள் கொஞ்சமும் குறை யாமல், அப்படியே தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜய்சங்கர். 'புதிய இந்தியா எனும் கோணல் மரம்' என்ற தலைப்பில் தமிழில் வெளியாகியுள்ள இந்நூலை எதிர் வெளியீடு பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. விலை ரூ.399. நாடாளு மன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னால், பா.ஜ.க.வின் போலி பிம்பத்தைச் சுக்கு நூறாக உடைக்கும் ஆவணம் தமிழில் வெளியாகியிருப்பது மிகப் பொருத்தமானது. அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

## :ப்ளாஷ்பேக்



ஆறுமுகம்

### காசுமாலை வரவேற்பு!

தமிழ்நாட்டை 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை சூழ்ந்த போது, கழகத் தலைவர் அவர்கள் தஞ்சாவூர் நகரத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது டாக்ஸி ஓட்டுநர் சங்கம் சார்பாக, காசுமாலை அணிவித்து வரவேற்றோம். நான் அன்று ஓட்டுநர் சங்கத் தலைவராக இருந்தேன். மிசா வழக்கு நிதியாகப் பயன்படுத்தப் படும் என்று தலைவர் அந்தக் காசு மாலையைச் சுட்டிக்காட்டி உரையாற்றி னார். அப்போது நாங்கள் எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் என் வாழ்வில் மறக்க முடியாத புகைப்படம் என்பேன்.

**-டாக்ஸி ஆறுமுகம்,
கழகப் பொதுக்குழு உறுப்பினர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் ஆங்கிலப் புலமை!

**1934-இல் திருச்சி தேவர் மன்றத்தில் 'நீதிக்கட்சியின் மாநாடு' நடைபெற்றது. கி.ஆ.பெ.விசுவநாதம் நடத்திய இந்த மாநாட்டில், மாநாட்டுத் தலைவரான சர்.ஏ.ராமசாமி முதலியார் பேச்சை தமிழில் மொழிபெயர்க்க, ஒருவரைத் தேடினார்கள். வழக்குரைஞர்கள் பலர் இருந்தும் மறுத்துவிட்டனர். அண்ணாவை ஒருவர் அறிமுகப்படுத்தினார். அப்போது, அண்ணா கல்லூரி முடித்த இளைஞர். பெரிய தலைவரின் பேச்சை மாணவர் மொழிபெயர்த்தால் நன்றாக இருக்குமா என்ற தயக்கம் இருந்தாலும், வேறு யாருமே இல்லாததால் சம்மதித்தார் கி.ஆ.பெ. ஆனால், அண்ணாவின் மொழி பெயர்ப்புத் திறனைப் பார்த்து கி.ஆ.பெ.வும், ராமசாமி முதலியாரும் வியந்துவிட்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 358




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131